Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2862)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 08 புதன்கிழமை (24.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 297

















# மக்களின் துயர் துடைக்கும் இலட்சியப் பணி தொடர்வோம்



## அரசியல் உரிமைகள் கைக்கெட்டும் காலம் வெகுதொலைவில் இல்லை

(யாழ்ப்பாணம்)

அரசியல் உரிமைக்காக மட்டும் அல்ல மக்களின் துயர் துடைக்கும் உன்னத இலட்சியப் பணியையும் அயராது தொடர்வோம் என்றும் அரசியல் உரிமைகள் எமது மக்களின் கைகளுக்கு எட்டும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் எமக்கே ஆணை வழங்குவார்கள். அவ்வாறு ஆணை கிடைக்கும் போது தமிழ் பேசும் மக்கள் வடக்கு தேசத்தின் விடிவெள்ளியாக திகழப் போகும் முதலமைச்சர் யார் என்பதை எமது மக்களின் விருப்பங்களை ஏற்று நானே தீர்மானிப்பேன் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா

(19) ஆம் பக்கம் பார்க்க

## "வாழ்வின் எழுச்சி" மூலம் 12 செயற்திட்டங்கள் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 7076.47 மில்லியன் ரூபா நிதிச் செலவில் 12 வகையான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். நூல்நிலைய கேட்போர்கூடத்தில் அரச தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரதேச ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தில் திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் 12 வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதில் மீன்பிடி, விவசாயம், குடிசைக் கைத்தொழில், கால்நடை வளர்ப்பு போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடங்குவதாகவும் தெரிவித்தார்.

இதில் விவசாய நடவடிக்கையை ஊக்குவிக்கும் முகமாக 992 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 256 விவசாய அமைப்புக்கள் இயங்கிவருவதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கென மேலும் 2013 இல் 75 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதுடன் 2014 இல் 120 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நெல் உற்பத்தி அதிகமுள்ள நிலையில் சின்ன வெங்காயத்தின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதுடன் மீன்பிடியும் அபிவிருத்தியடைந்திருப்பதாகவும் யாழ். அரச அதிபர் சுந்தரம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மகேஸ்வரனின் சகோதரன் ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மறைந்த தியாகராசா மகேஸ்வரனின் சகோதரன் துவாரகேஸ்வரன் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட அவர் விருப்பம் கொண்டிருந்த போதும் அவரது முயற்சி வெற்றி பெற்றிருக்கவில்லை. குறிப்பாக ரெலோ அமைப்பின் வேட்பாளராக களமிறங்க அவர் ஆர்வம் கொண்டிருந்தார். எனினும் அவருக்கு ஆசனம் வழங்க ரெலோ பின்னடித்துவிட்டது.

இந்நிலையில் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடவுள்ள நிலையில், வேட்பாளர் தெரிவு தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில் துவாரகேஸ்வரனை முதன்மை வேட்பாளராக நிறுத்துவதற்கு ஐக்கிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழில் 13 படை முகாம்களுக்கு இந்த வாரம் மூடுவிழா

### காணிகளும் மீளளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பதின்மூன்று இராணுவ முகாம்கள் இந்த வாரம் மூடப்படவுள்ளது.

இராணுவத்தினர் வெளியேறிய முகாம் அமைந்திருந்த காணிகளின் உறுதிப்பத்திரங்கள் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் மாதமளவில் காணி அமைச்சு உரிய காணி உரிமையாளர்ளுக்கு இந்த ஆவணங்களை வழங்கும் பணிகளை ஆரம்பிக்கும் என யாழ். கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

காணி உரிமையாளர்களை அடையாளம் காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## உயர்கல்வியில் பின்னடைவு தடுத்துநிறுத்த செயற்திட்டம்

### உயர்கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

உயர்கல்வி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அண்மைய ஆண்டுகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பாக கடந்த 87,88 மற்றும் 89 ஆம் ஆண்டுகளின் பின் பல்கலைக்கழகங்களில் கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய புதிய தயாரிப்பு முயற்சிகளும் சரிவடைந்துள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி பல்கலைக்கழக உப வேந்தர்கள் மற்றும் பேராசிரியர்கள் நிர்வகித்த அதிகாரங்களை,

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் விவகாரம் அடுத்த வாரம் முக்கிய பேச்சு

(கொழும்பு)

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தையொன்றை நடத்துவதற்கு கொழும்புக்கு வருமாறு தமிழ்நாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. மீன்பிடித் திணைக்கள ஆலோசகரான

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டிஷ் எம்.பி.க்கள் கிளிநொச்சிக்கு நேற்று விஜயம்

(கொழும்பு)

வடபகுதிக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தனர்.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், கொழும்பிலுள்ள அந்நாட்டின் தூதர் அலுவலகத்தின் உயரதிகாரிகளும் வடக்கே விஜயம் செய்துள்ளனர்.

## அகதிகள் படகு நடுக்கடலில் மாயம்

(கொழும்பு)

தென்பகுதி கடற்கரையில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு சென்ற அகதிகள் படகு ஒன்று காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை மிரிஸ்ஸ என்ற இடத்தில் இருந்து கடந்த 17 ஆம் திகதியன்று புறப்பட்டதாகக் கூறப்படும் இந்தப்படகிற்கு என்ன நேர்ந்தது என்ற விடயம் இதுவரை வெளியாகவில்லை.

படகில் பயணித்தவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் படகு தொடர்பில் இலங்கை கடற்படைக்கு எவ்வித தகவல்களும் இதுவரை

(19) ஆம் பக்கம் பார்க்க




சின்னமடுமாதா கோயில் உற்சவம் யூலை மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் 5ஆம் திகதி முடிவடைகின்றது இவ் உற்சவத்தினை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சிரமதானத்தினை மேற்கொண்டபோது...

# கட்டுரைப்போட்டி

யாழ். மாநகரசபையின் கலாசாரப் பகுதியினால், நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடாத்தப்படும் கட்டுரைப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும். விண்ணப்பித்த மாணவர்கள் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# பொதுக்கூட்டம்

யாழ். மாநகரசபையின் 2013ஆம் ஆண்டுக்கான ஏழாவது (யூலை மாத ) மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை பி.ப 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

# பாடசாலை மாணவர்களுக்கு விட்டமின் மாத்திரைகள்

கல்வி அமைச்சினதும், சுகாதார அமைச்சினதும் வேலைத் திட்டத்திற்கு ஏற்ப பாடசாலை மாணவர்களிற்குபோலிக்கசிட் விட்டமின்கள் பிரதேச சுகாதாரப்பிரிவினர்களால் யாழ். மாவட்டப்பாடசாலைகளிற்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஆரோக்கியமான மாணவர்களை உருவாக்கும் கல்வியமைச்சின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இந்த வேலைத்திட்டம், பாடசாலைகள் தோறும் 24 வாரங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போலிக்கசிட் விட்டமின் வில்லைகளைப் பாடசாலைகளில் வைத்தே மாணவர்கள் உட்கொள்ளும்படி ஆசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். வீட்டிற்கு எடுத்துச்சென்று உட்கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது. (06)

**பனை அபிவிருத்திச் சபை**

**கிளிநொச்சி - ஊற்றுப்புலம் மாதிரிப் பனந்தோட்டம்**


மேற்படி பனம்பண்ணையில் 15' விட்டமும் 15' ஆழமும் உடைய கிணறு ஒன்றும், 25' நீளமும் 22'x6" அகலமும் கொண்ட பண்ணைக்கட்டடம் (மலசல கூடமும் அடங்கலாக) ஒன்றும் அமைப்பதற்கான, தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து (இத்தாற்பதிவுடைய) கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

இதற்கான விரிவான கூறுவிலை விண்ணப்பங்களை ஆடிமாதம் 25ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதிவரை பனை அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திலோ அல்லது யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள தேசிய வீடமைப்புச் செயலக கட்டடத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்திலோ பெற்று பூரணப்படுத்தி ஆவணி 7ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக்கூடியதாக தலைவர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்.

(C/2953)

# “நிகழ்காலத்துப் பூக்கள்” கவிதைநூல் அறிமுக விழா



(வேலணை)

வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் வானவில் வெளியீடாக ஜெயா தமிழினியின் 'நிகழ்காலத்துப் பூக்கள்' கவிதைத் தொகுப்பு நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரபல எழுத்தாளரும் அரசியல் ஆய்வாளருமாகிய யதீந்திரா தலைமைதாங்கினார் முதன்மை விருந்தினராக வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா கலந்து சிறப்பித்தார் இலக்கிய செற்பாட்டாளர் ச. சத்தியதேவனும் கலந்துகொண்டார்.

முதல்பிரதியினை ஊர்காவற்றுறை பதிவாளர் கா.இளங்கோவன் பெற்றுக் கொண்டார் , இந்நிகழ்வில் நூல் மதிப்புரையினை வேலணை மத்திய கல்லூரியின் அதிபர் சிவசாமி கிருபாகரனும் கருத்துரையினை ஓய்வு பெற்ற சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமியும் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் ஜெயநாயகம் ஜெயரஞ்சனும் நிகழ்த்தினர் பாடசாலைமாணவர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

# கட்டாக்காலி நாய்களால் போக்குவரத்து இடையூறு

யாழ். பருத்தித்துறை வீதியில் கோப்பாய், இருபாலை போன்ற பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக்காணப்படுவதாக பயணிகளாலும் பாதசாரிகளாலும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்கள் வீதியின் நடுவே படுத்துக்கிடப்பதுடன் வீதிகளை அசிங்கப்படுத்தியும் வருகின்றன. அத்துடன் இவை குறுக்கும் மறுக்காக வீதிகளில் ஓடித்திரிவதால் பயணிகள் விபத்துக்குள்ளாகும் அபாய நிலையும் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கனரக வாகனங்களும் பாரஊர்திகளும் வேறு வாகனங்களும் பயணிக்கும் பிரதான வீதியான பருத்தித்துறை வீதியில் இக்கட்டாக்காலி நாய்களினால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக வாகன ஓட்டுநர்களும் பயணிகளும் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இக் கட்டாககாலிகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# காரைநகர் அணிகளுக்கிடையில் பெண்கள் வலைபந்தாட்டம் இன்று

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளின் ஒன்றாக பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டி இன்றைய தினம் இடம் பெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக காரைநகர் பிரதேசத்திற்குட்பட்ட அணிகளுக்கிடையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் இன்றும், நாளையும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 28ஆம் திகதி வரை பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.இப்போட்டிகள் யாவும் காரைநகர் சமுர்த்தி உத்தியோகத்தர் சி. கபிலன் தலைமையில் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

**ஜயோதா**

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு இலக்கம் 975 | திகதி 22.07.2013

வெற்றி எண்கள்: 07 16 20 59 | ஆங்கில எழுத்து: L

**ஜக்பொட் பரிசு ரூ. 1,21,54,300/= வெற்றி பெற்றுள்ளார்**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,21,54,300/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 4,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 169 | 1,000/= | ரூ. 1,69,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 260 | 1,000/= | ரூ. 2,60,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 6883 | 60/= | ரூ. 4,12,980/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 3537 | 40/= | ரூ. 1,41,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 90555 | 20/= | ரூ. 18,11,100/= |
| ஆங்கில எழுத்து | 13235 | 20/= | ரூ. 2,64,700/= |
| | | மொத்தம் ரூ. | 44,59,260/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 604526052-8-28 |
| மட்டக்களப்பு | 604524150-2-32 |
| யாழ்ப்பாணம் | 604522674-4-34 |
| பொலன்னறுவை | 604521961-0-30 |
| பதுளை | 604526484-6-16 |
| மாத்தறை | 604523310-9-29 |
| அநுராதபுரம் | 604521580-0-40 |
| கண்டி | 604526702-1-41 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 48,59,260/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 1,23,31,320/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.07.25 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/2952)

# தென்னிலங்கை உள்ளூராட்சி தலைவர்கள் நல்லூர் பிரதேச சபைக்கு வருகை

(திருநெல்வேலி)

தென்னிலங்கையிலிருந்து சில உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள், உபதலைவர்கள் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் என சுமார் 24 பேர் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் பிரதேச சபைக்கு வருக்கை தந்தனர்.

- அகலவத்தை, யக்கறமுல்ல, பசறை, நுவரெலியா, பதுளை, அத்துகிறிய, ஹாலி எல போன்ற உள்ளூராட்சி சபைகளிலிருந்து இவர்கள் வந்திருந்தனர்.

நல்லூர் பிரதேச சபை வாயிலில் வைத்து தமிழர் கலாசார முறைப்படி பெண்கள் ஆரத்தி எடுத்து பொட்டு வைத்து இவர்களை முறைப்படி வரவேற்றனர்.

சபையின் உள்ளே பல இடங்களையும் சுற்றிப் பார்த்து மகிழ்வடைந்த இவர்கள்சபை நடவடிக்கைகளையும் பார்வையிட்டனர்.

யக்கரமுல்ல பிரதேச சபைத்தலைவர் சந்துமதி வியனகே, அத்துறலிய பிரதேச சபைத் தலைவர் நிஹால், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார், எதிர்க்கட்சித்தலைவர் அ.ரவீந்திரதாஸன், நல்லாட்சிக்கான அமைப்புத் தலைவர் திருமதி ஷிநாயி ஜெயசுந்தர எனப் பலரும் உரைநிகழ்த்தினர்.

நல்லெண்ண அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் இவ் வருகை ஏற்பாடு செய்யப்பட்டது.

சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து உள்ளூராட்சி சபைகளை சேர்ந்த தலைவர்கள், உறுப்பினர்கள் தென்னிலங்கைப் பயணத்தை மேற்கொண்டு அங்குள்ள உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளைப் பார்வையிட்டுவந்தனர். (137)

## நீண்ட வருடங்களின் பின்னர் வளலாய் விநாயகருக்கு கும்பாபிஷேகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி-வளலாய் பிள்ளையார் ஆலயமானது கடந்த 23 வருடங்களுக்குப் பின்பு சென்ற வருடமே புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இந்த வருடம் ஆலய வருடாந்த மகோற்சவமானது கொடியேற்றத்துடன் ஆரம்பாகி நேற்று முன்தினம் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற்றது.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் கடந்த பல வருடங்களாக பற்றைகள் மூடி சேதங்களுடன் பூசை வழிபாடுகள் எவையும் நடைபெறாது காணப்பட்ட இவ் ஆலயத்துக்கு கடந்த வருடம் இராணுவத்தினர் மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்தே ஆலய நிர்வாகத்தினால் பூசை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன.

எனினும் இருபத்து மூன்று வருடங்களுக்குப் பின்னர் இந்த வருடமே திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றமையால் பல பக்த அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்து திருவிழாக்களில் கலந்து கொண்டு விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளை பெற்றுச் சென்றுள்ளதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

(85)

## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தின் 15 தினங்களும் அபிஷேகம் நடைபெற்று 9 ஆம திகதி ஆடிப்பூரத்தில் விசேட தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

(109)

## ஆனையிறவில் புதிய ரயில் நிலையம் 23 வருடங்களின் பின் இன்று ஆரம்பப்பணி

(ஆனையிறவு)

23 வருடங்களின் பின் 15 மில்லியன் ரூபா செலவில் ஆனையிறவுக்கான புதிய ரயில் நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இன்று இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நிதியுதவி மூலம் சகல வசதிகளுடன் கூடிய புதிய ரயில் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி புதிய ரயில் நிலையத்திற்கான நிர்மாணப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.யுத்தம் காரணமாக சேதமடைந்த வட பகுதிக்கான ரயில் பாதை



புதிதாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்ற நிலையில், சுமார் 23 வருடங்களுக்கு பிறகு முதற் தடவையாக ஆனையிறவுக்கான ரயில் நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

வட பகுதி மக்களின் நலனை கருத்திற்கொண்டு கிழக்கு உட்பட எட்டு மாகாணங்களிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள், ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் 15 மில்லியன் ரூபா செலவிலேயே இந்த புதிய ரயில் நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை, பாடசாலை மாணவர்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு என்பவற்றின் பிரதிபலிப்பாகவே கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிதி சேகரிப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 23 வருடங்களுக்கு முன்னர் ஆனையிறவு ரயில் நிலையம் அமைந்திருந்த அதே இடத்திலேயே புதிய ரயில் நிலையமும் நிர்மாணிக்கப்படவுள்ளது என்று தெரிவித்த அவர், இவ்வாண்டு இறுதிக்குள் அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடையவுள்ளது என்றார்.

## முன்னறிவித்தலின்றிய மின்வெட்டால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு



(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும முன்னறிவித்தலின்றிய இரவு நேர மின்வெட்டுக் காரணமாக மாணவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ள்தாக மாணவர்களும், பெற்றோர்களும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக அச்சுவேலி , ஆவரங்கால், புத்தூர் போன்ற பகுதிகளில் எவ்வித மான முன்னறிவித்தலுமின்றி இரவு 7.00 மணி முதல் சில மணிநேரங்களுக்கு தொடர்ச்சியாக மின்வெட்டினை அமுல் படுத்தி வருவதால் இரண்டாம் தவணைப் பரீட்சைக்காக கற்றலில் ஈடுபட்டு வரும் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதுடன் கைவிளக்குகளின் உதவியுடனேயே கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சில வேளைகளில் இம்மின்வெட்டு சுமார் இரண்டு முதல் மூன்று மணித்தியாலங்கள் வரை தொடர்ந்தும் செல்கின்றது.

மேலும், மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டிருக்கும் வேளைகளில் மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய அலுவலகத்திற்கு தொலைபேசி மூலமான தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைப் பெற முனைகின்ற போதிலும் அழைப்புக் கிடைப்பதிலும் பெரும் நெருக்கடி நிலை காணப்படுவதாக பொதுமக்கள் தெவிக்கின்றனர்.

(03)

## பாலேந்திரா குழுவினரின் மாபெரும் நாடக விழா

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழக பாலேந்திரா குழுவினரின் மாபெரும் நாடக விழா நிகழ்வு எதிர்வரும் ஆகஸ்ட மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நாடக விழாவில் கண்ணாடி வார்ப்புக்கள், பாடம், சம்பந்தம் ஆகிய நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. இலங்கைத் தமிழ் அரங்க வரலாற்றில் 1970 களில் நவீன மொழிபெயர்ப்பு நாடகங்களின் முன்னோடிகளாகத் திகழ்ந்த முன்னனி நெறியாளர் பாலேந்திரா குழுவினரின் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் நீண்ட இடைவெளிக்குப் பிற்பாடு யாழ்.மண்ணில் நாடக ஆற்றுகையினை நிகழ்த்தவுள்ளனர்.

இந்நாடக விழாவிற்கான அனுசரனையினை திருமறைக் கலாமன்றம் சப்தமி ஒலிப்பதிவுக் கூடம் கலை இலக்கியப் பேரவை ஆகிய நிறுவனங்கள் வழங்குகின்றன. இந் நாடக விழா விற்கு நாடக ஆர்வலர்களை கலந்து கொள்ளமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளார்கள்.

## திருமுறை மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவையும் விருத்தி செய்யும் பொருட்டு, சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இப் போட்டி தரம் 1,2 பாலர் பிரிவிலும் தரம் 3,4 கீழ் பிரிவிலும நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "நத்தார்படை ஞானன் பசு" "பொன்னார் மேனியனே" கீழ்பிரிவுக்கு "பித்தா பிறைசூடி பெருமானே" மற்றுப் பற்று எனக்கு இன்றிநின் திருப்பாதமே ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 04 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவு திகதி யூலை 27 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் ஓகஸ்ட் 13 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக் கழக சமய பிரசாரகரும் உதவி பரீட்சை செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

## பரீட்சைகளின் திகதிகள் அறிவிப்பு


(யாழ்ப்பாணம்)

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பின்வரும் பரீட்சைகள் எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை (2014-2016) நாடு முழுவதிலும், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகையின் III ஆம் வகுப்புக்கு புள்ளிவிபரவியலாளர் ஆட்சேர்ப்புச் செய்தலுக்கான திறந்த போட்டிப் பரீட்சை 2012 (2013) கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் 28 ஆம் திகதி இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் களநிலை அலுவலக குழு 2 முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2012 (2013) கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் விண்ணப்ப படிவத்தில் குறிக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் மேலதிக விபரங்களுக்கு 011-2785230 , 0112177075 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.








யாழ்.மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பாக பிரதேச ஊடகவியலாளர்களுக்கான அறிவூட்டும் செயலமர்வு நேற்று யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போது தகவல் திணைக்கள பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல உரையாற்றுவதையும், விருந்தினர்களாக கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பேராசிரியர் ஆரியரத்ன, தினகரன் ஆசிரியர் தில்லைநாதன் மற்றும் யாழ்ப்பாண சிவில் இராணுவ அதிகாரி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் செயலமர்வில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களையும் காணலாம். (படங்கள்-ஆர்.ராஜகுமார்)

கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.
- சாணக்கியர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## எப்போது நாம் நாகரிகமடைவது?

இதுவரைகாலமும் புலம்பெயர்ந்த நாடுகளில் மட்டும் நடைபெற்று வந்த இலக்கியச் சந்திப்பின் 41–வது மாநாடு முதன்முறையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. கடந்த சனியும் ஞாயிறும் யாழ்ப்பாணம் அக்றேறியன் லேனில் உள்ள யூரோவில் மண்டபத்தில் இந்த இலக்கியச் சந்திப்பின் ஒவ்வொரு நாளும் சுமார் இருநூறு பேர்வரையில் வந்து கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் சகல பகுதிகளிலுமிருந்து வந்திருந்த இலக்கிய ஆர்வலர்களும் எழுத்தாளர்களும் பண்பாடு, சாதியம், இலக்கியம், தேசிய இனங்கள்–பிரச்சினைகள் ஆகிய தலைப்புகளில் பல மணிநேர விவாதங்களை நடத்தியிருந்தனர். பல புதிய கருத்துக்களும் நெஞ்சைத் தொடும் அனுபவப்பகிர்வுகளும் ஒவ்வொரு அமர்விலும் வெளிப்பட்டன.

முஸ்லிம் தேசியம், மலையகத் தேசியம் ஆகியவற்றின் முகிழ்ப்பின் பின்னுள்ள காரணிகள், சிங்களத் தேசியத்தின் எண்ணப்பாடுகள் குறித்த சிங்கள வளவாளர்களின் பகிர்வுகள், தமிழ்த் தேசியம் பற்றிய விசாரணை, சாதியம், பெண்களின் நிலை, வரலாற்று விடுபடல்கள், பண்பாட்டுருவாக்க நெருக்கடிகள் குறித்தெல்லாம் விரிவான பலதரப்பு விவாதங்கள் நடத்தப்பட்டன.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், இந்தியாவிலிருந்து இந்து ஆங்கில நாளிதழ், லண்டனிலிருந்து பிபிசி போன்றவை எல்லாம் இந்த இலக்கியச் சந்திப்பு பற்றி செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் தமிழ் ஊடகங்களில் இப்படி ஒரு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்ததற்கான அடையாளத்தையே காணக் கிடைக்கவில்லை. அதிலும் யாழ்ப்பாண ஊடகங்கள் கண்ணை மூடிக்கொண்டது ஏன் என்று யோசித்தால்தான் எங்கள் பத்திரிகா தர்மங்கள் ஊடக நடுவுநிலைமை எல்லாம் ஓடிவெளிக்கின்றன.

மற்றவர்களின் கதையை காதுகொடுத்துக் கேட்கவே விரும்பாத போக்கும், மற்றவர் கதியை நினைத்தே பார்க்க விரும்பாத தன்மோகமும் தான் எங்கள் சமூகத்தை இன்னும் வழிநடத்துவதாகத் தெரிகிறது. ஏனைய சமூகத்தவர்களை, ஏனைய பார்வைகளை ஏனைய பேச்சுக்களை சகித்துக்கொள்ளாமையும் அவற்றை மறைக்க முற்படுதலுமே நம் ஊடக அரசியல் கலாசாரமாக இருக்கிறது.

நம்மைத் தவிர்ந்த மற்றவர்களை (மற்றவற்றை) நம்மைவிட மட்டமாக நினைப்பதும், இழித்து ஒதுக்குதலும் நமது மரபாயிருந்துவரும் பழக்கங்களிலொன்று என்பது தெரிந்ததே. அது இவ்வளவு உலக மாற்றங்களுக்குப் பிறகும் இன்றும் தொடர்கிறது. வடக்கத்தியான், மோட்டுச் சீனா, தொப்பி பிரட்டி, காப்பிலி, பறங்கி, பாம்புதின்னி என்பவையெல்லாம் ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களை விளிப்பதற்காக நாம் ஏற்கனவே தமிழில் வைத்திருக்கும் வார்த்தைகள் என்பதில் அதிசயமென்ன?

இதிலுள்ள பாசிஸ மனோநிலையை இன்னும் உணராதவர்களாகவே நம்மில் பலர் இன்றும் இதே பாணியில் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் நினைத்துக்கொண்டும் இருக்கிறார்கள். அதையே தமிழ்ப் பெருமையாகவும் எண்ணிக்கொள்ளும் கடந்த காலத்தவர்களாக மாறாமனிதர்களாய் இன்னுமிருக்கிறோம்.

ஒருபடி மேலே போய், அந்த சமூகங்கள் நாம் நினைத்தமாதிரி நடக்கவில்லை என்றால், மிரட்டுவதும் சாபமிடுவதும் குதிப்பதுமாக மிகக் கேலிக்கிடமாகவும் நடந்துகொள்கிறோம். நம்மை நாமே உயர்வாய் நினைத்துக்கொண்டு பிறரை விலக்குதல் மிரட்டுதல் ஒழித்துவிடுதல் என்ற எண்ணப்பாங்கிலேயே இன்னமும் நமது ஊடகங்களும் ஆதிக்க அரசியலாளர்களும் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இங்கு பலர் இப்போதும் இனவாதத்தன்மை மாறாமலேயே சிந்திக்கிறார்கள்; எழுதுகிறார்கள். அதிலுள்ள அறக்கீழ்மை பற்றிய புரிதலும் குற்றவுணர்வும் கூட இல்லை. ம்... எப்போது நாகரிகமடைந்த மனித சமுதாயங்களில் ஒன்று என நாமும் ஆகப்போகிறோம்?

- ஆசிரியர்.

# ஆஸியின் முடிவைக் கண்டித்து பல இடங்களில் போராட்டங்கள்

(கொழும்பு)

படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு தஞ்சம் கோரி வருவோரை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என்றும் வெளியே பபுவா நியூகினியிலுள்ள முகாமுக்கு அனுப்பிவிடுவது என்று அவுஸ்ரேலிய அரசு முடிவு செய்துள்ளதைக் கண்டித்து நாட்டில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

படகுகளில் ஏறி அவுஸ்ரேலியாவுக்கு வருவோர் உண்மையான தஞ்சம் கோரிகள் என்று கண்டறியப்பட்டால் கூட அவர்கள் இனி நாட்டுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அவுஸ்ரேலியப் பிரதமர் அறிவித்துள்ளார்.

பபுவா நியூகினியில்தான் அவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்படுவார்கள். அவுஸ்ரேலியாவின் இந்த முடிவு அது ஏற்றுக் கொண்ட ஐ.நா. ஒப்பந்தங்களை மீறுவதாக செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

ஆளும் தொழிற்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடந்த இடத்திற்கு அருகேயும் திங்கட்கிழமையன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

ஆபத்தான படகுப் பயணம் மூலம் வரும் பல தஞ்சக் கோரிக்கையாளர்கள் கடலில் விழுந்து சாகின்றனர், இவர்களுக்குப் பின்னால் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட குற்றக் குழுக்கள் இருக்கின்றன என்கிறது அவுஸ்ரேலிய அரசு. ஆனால் இந்த வாதம் உண்மையல்ல என்கிறார் அகதிகளுக்கான நடவடிக்கை கூட்டணி சார்பில் பேசவல்ல இயன் ரிங்ச்சல்.

இந்தோனேஷியாவில் இருக்கும் அகதிகளில் ஆண்டுதோறும் 20 ஆயிரம் பேரை ஏற்பதாக அவுஸ்ரேலியா ஐ.நா. அகதிகள் ஆணையத்திடம் கூறியிருந்தும் மிகக் குறைந்த அளவிலானவர்களையே அது ஏற்கிறது என்றும் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனிடையே, அவுஸ்ரேலியாவின் குடிவரவுத் துறை தனது இணையத் தளத்தில் தரையில் உட்கார்ந்து இருக்கும் பெண் தலை கவிழ்ந்து இருப்பது போல ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளது. இனி அவுஸ்ரேலியாவுக்கு வர முடியாது என்ற செய்தியை இந்தப் பெண் தஞ்சம் கோரி இனி ஏற்றாக வேண்டும் என்று அந்தப் படத்துக்கு தலைப்பும் போடப்பட்டுள்ளது. இதற்கு சமூக வலைத் தளங்களில் கடும் ஆட்சேபனைகள் ஏற்பட்டுள்ளன.

# தூக்கமாத்திரை விற்பனையாளரின் அனுமதிப்பத்திரம் இரத்தாகும்

(கொழும்பு)

கொஸ்கம பகுதி வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தூக்க மாத்திரைகளை விநியோகித்த மருந்து மொத்த விநியோகஸ்தரின் அனுமதிப்பத்திரத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

மருந்து விடயத்தில் எவ்வித தொடர்புமற்ற ஒருவருக்கு இந்தளவு தூக்க மாத்திரைகளை விநியோகித்தமை தொடர்பில் சம்பந்தப்பட்ட மருந்து விநியோகஸ்தருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுபானத்துடன் கலப்பதற்காக இந்த தூக்க மாத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. கள்ளு வகைகளில் அடங்கியுள்ள போதையின் அளவைக் கூட்டுவதற்காக தூக்க மாத்திரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் சுமார் 25 ஆயிரம் லீற்றர் கள்ளுடன் ஆயிரம் தூக்க மாத்திரைகள் கலக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தூக்க மாத்திரை கலக்கப்பட்ட கள்ளு விற்பனை செய்யப்பட்ட இடமொன்று கிரிந்திவெலயில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. கூடுதல் போதை காணப்பட்டமையினால் அந்த இடத்தில் கள்ளுக்கு அதிக கிராக்கி நிலவியிருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

தூக்க மாத்திரைகளை கள்ளுடன் கலப்பதால் தன்னையறியாமலேயே பாவனையாளர்கள் அதற்கு அடிமையாவதுடன் உடல் ஆரோக்கியத்திற்கும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படக் காரணமாக அமைந்துவிடும் என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக அதிக தூக்கம், நரம்புகளில் தளர்ச்சி மற்றும் ஞாபகசக்தியில் குறைபாடு ஆகிய பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தூக்க மாத்திரைகளுக்கு அடிமையாகின்றவர்களின் முன்கூட்டியே சிந்திக்கும் ஆற்றல் பாதிப்படைவதால் விபத்துகள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளுக்கு இலக்காகும் அபாயம் காணப்படுவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணித்தால் பதவி துறப்பேன்

வல்பொல பட்டுவத்தையூடாக அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படமாட்டாது. அவ்வாறு நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டால் அரசியலிலிருந்து தான் விலகிக்கொள்வேன் என்று அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

நாரங்கொடபாலுவ மற்றும் வல்பொல பட்டுவத்தையூடாக நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள வடக்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வல்பொல கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ரயில் தண்டவாளத்தை மறித்து நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த இடத்திற்கு வந்தே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் அந்த இடத்திற்கு வந்துகொண்டிருந்தபோது பிரதேச வாசிகள் ரயில் தண்டவாளங்களில் ரயர்களை எரித்துக்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஆட்கடத்தலில் ஈடுபடுவோர் குறித்து தகவல் தந்தால் சன்மானங்கள்

அவுஸ்ரேலிய பிரதமர் அறிவிப்பு

அவுஸ்ரேலியாவுக்கு ஆட்களைக் கடத்துவதில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல் அளிப்பவர்களுக்கு பண சன்மானங்கள் அளிக்கப்படும் என அவுஸ்ரேலிய பிரதமர் கெவின்ருத் அறிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு புகலிடம் கோரி வருபவர்களை பபுவா நியூகினியாவில் மீள்குடியமர்த்தும் தனது புதிய கடும் போக்குக் கொள்கையை வலுப்படுத்தும் அங்கமாகவே அவர் மேற்படி அறிவிப்பைச் செய்துள்ளார்.

ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களை கைது செய்வதற்கு வழிவகை செய்யக்கூடிய தகவலை வழங்குபவருக்கு 200,000 அவுஸ்ரேலிய டொலருக்கு (180,000 அமெரிக்க டொலருக்கு) அதிகமான சன்மானத்தை அவுஸ்ரேலிய பொலிஸ் வழங்கும் என அந்நாட்டு உள்நாட்டு விவகார அமைச்சர் ஜேஸன் கிளேயர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் (ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்கள்) துன்பத்துக்கும் மரணத்துக்கும் வழி வகை செய்கிறார்கள் நாம் இந்த ஆட்கடத்தல் வர்த்தகத்தை மூட வேண்டியுள்ளது. அதனாலேயே அவர்களது தலைகளுக்கு சன்மானம் விதித்துள்ளோம் என கிளேயர் கூறினார்.

இந்த ஆண்டில் மட்டும் அவுஸ்ரேலியாவை 15,600 இற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் படகுகளில் வந்தடைந்துள்ளனர்.



# விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள்

## 48

■ வே. அர்ச்சுனன்

தினமும் இழப்புக்களும் பின்னடைவுகளும் தொடர்ச்சியாக இடம்பெறத் தொடங்குகையில், பாப்பாவுடன் நின்ற பலரும் சாவைத் தழுவிக் கொண்டிருக்க, தனது சாவும் உறுதியாகி விட்டது என எண்ணிக் கொண்ட பாப்பா களமுனையில் இருந்து தப்பியோடவும் முடியாது வேறு காரணங்களைக் கூறி கள முனையை விட்டு வெளியேறவும் முடியாது என்ற இக்கட்டான நிலையில் ஒரு வேலை செய்கிறார். அதாவது முன்னேறி வருகின்ற படை யினருடன் மோதலில் ஈடுபட்டால் சாவு நிச்சயம் என்ற நிலையில் தன்னைத் தானே சுட்டுக் காயப்படுத்திக் கொண்டால் களமுனையில் இருந்து வெளியேறி இயக்கத்தின் மெடிக்ஸிலோ(பாமசி) அல்லது அரச மருத்துவ மனையிலோ கொஞ்சக் காலத்திற்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தால் உயிர் பிழைக்கலாம் என்ற முடிவிற்கு வருகிறார்.

களமுனைகளில் இராணுவ ரீதியான பல்வேறு வெற்றிகளையும் ஈட்டிய போராளிகள் தளபதிகள் திருமண பந்தத்திற்குள் வந்தவுடன் களமுனைகளை மறந்து குடும்பம் உறவினர் உறவு என்ற வட்டகைக்குள் சிந்திக்கத் தொடங்கினர். இதன் தொடர்ச்சியாக போராட்டம் என்ற கொள்கையை விட குடும்பத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தனர். இத்தகைய போராளிகள் தள-பதிகள் மத்தியில் பாப்பாவும் இருந்த போதும் பாப்பா சற்று வித்தியாசமானவர். பாப்பா எப்பொழுதும் ஜொலியான மனிதராக விளங்கினார். பாப்பாவின் மன உணர்வுகளையும் பாப்பாவின் திருமணம் தொடர்பான பல்வேறு சுவாரஸ்யமான சம்பவங்களையும் சற்று மேலோட்டமாக பார்த்து விட்டு செல்வது பொருத்தமாக இருக்கும்.

நான் ஏற்கனவே இப் பத்தியில் குறிப்பிட்டு வரு-வதைப் போன்று ஓர் ஜொலியான பேர்வழியாக வலம் வந்த பாப்பா ஆரம்பத்தில் இயக்கத்தில் இணைந்தது முதல் முள்ளி வாய்க்கால் முடிவுகள் ஏற்படும் வரை உல்லாசமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அதாவது இயக் கத்தில் பல்வேறு கட்டுப் பாடுகள் தடைகள் நெருக் கடிகள் எல்லாம் இருந்த போதும் பாப்பா காதல் மன்னனாகவே வலம் வந்து கொண்டிருந்தார். பலரையும் தனது காதல் வலையில் வீழ்த்திய பாப்பா ஒரு கட்டத்தில் திருமண பந்தத்தில் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. அதாவது பாப்பாவினுடைய காதல் நடவடிக்கைகளில் ஒன்று கடுமையான நெருக்கடிகளின் மத்தியில் நகர்ந்து திருமணம் வரை வந்துவிடுகிறது.

தென்மராட்சி நுணாவில் மட்டுவிலைச் சேர்ந்த பாப்பா வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியை சேர்ந்த ஒரு யுவதியை திருமணம் முடிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை பாப்பாவிற்கு ஏற்படுகின்றது. பாப்பாவின் காதலியின் குடும்பத்தினர் சுற்றத்தார் உறவினர்கள் என அனை-வருமே பாப்பாவின் திருமணத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கத் தொடங்கினர். இதனை பாப்பாவும் மனைவியும் அலட்சியம் செய்து விட்டு திருமண பந்தத்திற்குள் நுழைகின்றனர்.

அதாவது இவ் எதிர்ப்புக்கு பிரதான காரணம் சாதிய ரீதியான பார்வை யும் அதன் பக்கங்களையும் முறியடித்து ஒரு சாதனை வீரனாக திருமண பந்தத்திற்குள் நுழைந்து கொண்டது பாப்பாவிற்கும் மனைவிக்கும் ஒரு திரில்லான செயற்பாடாகவே இருந்தது. இருந்த போதிலும் இவர்கள் இருவரது உறவு நிலை நீண்ட காலம் நீடித்து இருக்கவில்லை. அதாவது சாதிய ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாப்பாவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் பாப்பாவின் மனைவி காலப்போக்கில் அதிருப்தி அடையத் தொடங்கினார். இந்த அதிருப்தியின் விளைவாக தொடர்ச்சியாக குடும்பத்தில் சண்டைகள் சச்சரவுகள் நீடிக்கத் தொடங்கின. ஒரு கட்டத்தில் இவர்களுக்கிடையில் பிரிவு ஏற்படுகின்றது. இந்த பிரிவு பாப்பாவின் மனைவியை கடுமையாக வாட்டி வதைக்கின்றது. இருந்த போதிலும் பாப்பா ஜொலியான மனிதராக வேறு உறவுகளை நாடிச்செல்வதில் தொடர்ந்து ஆர்வம் காட்டிவந்தார்.

இந்த நிலையில் தான் புலிகளால் கிளிநொச்சியில் நவீன முறையில் அமைக்கப்பட்ட அரசியல் துறையின் நடுவப் பணியகமும் புலிகளின் சமாதான செயலகமும் திறக்கப் படுகின்றது. இந்த சமாதான செயலகத்திலும் நடுவப் பணியகத்திலும் அடிக்கடி ஜொலியாக வலம் வந்து கொண்டிருந்த ஒரு மனிதன் தான் கண்ணாடி மிரேஸ். இவர் ஆரம்ப காலத்தில் புலிகளின் ஊடகத்துறையுடன் இணைந்து செயற்பட்ட போதிலும் பின்னைய நாட்களில் இவர் நடுவப் பணி யகத்துடனும் சமாதான செயல கத்துடனும் இணைந்தவாறு சில வேலைத் திட்டங்களை முன் னெடுத்து வந்தார். பாப்பாவைப் போலவே ஒரு ஜொலியான மனி தராக எப்பொழுதும் அயன் குலை யாத உடைகளுடனும் வித்தியாச மான கொலோன்களையும் பாவித் துக் கொண்டு நடுவப் பணியகத்தை யும் சமாதான செயலகத்தையும் மாறி மாறி சுற்றிக் கொண்டு திரிந்த கண்ணாடி மிரேசிற்கும் பாப்பாவிற்கும் இடையே இருந்த நட்பு இறுக்கம் அடைகின்றது. இவர் கள் இருவரும் உணர்வுகளிலும் நட வடிக்கைகளிலும் ஒன்றித்தவர்களாக காணப்பட்டனர். களமுனைகளில் போராளிகள் இரத்தம் சிந்தி சாவை அணைத்துக் கொண்டிருந்த போதி லும் இவர்கள் இருவரும்அந்த சிந்தனைகள் எதுவுமே இல்லாமல் மகிழ்ச்சியுட னேயே எப்போழுதும் காணப்பட்டனர்.

பாப்பாவையும் கண்ணாடி மிரேசையும் இயக்கத்தின் போராளிகள் தமிழ் செல்வனின் செல்லப் பிள்ளைகள் என கூறிக் கொள்வார்கள். நடைமுறை யிலும் இத்தகைய நிலைப்பாடே இருந்து வந்தது. இந்த நிலையில் பாப்பாவின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட குழப்பத்தை தீர்த்து வைப்பது தமிழ்ச் செல்வனின் ஒரு வழமையான பணி யாக மாறிக் கொண்டு வந்தது. தமிழ் செல்வன் அடிக்கடி இருவரையும் ஒற்றுமைப் படுத்துவதில் ஈடுபட்டார். இதன் பின்னர் ஒரு கட்டத்தில் பாப் பாவின் பொறுப்பு விலக்கப்பட்டு தமிழீழ விளையாட்டுத்துறைக்கு பொறுப்பாக சம்பியன் என்பவர் இயக்கத்தால் நியமிக்கப்படுகின்றார்.

இதன் பின்னர் பாப்பாவை அழைத்த தமிழ்செல்வன் அரசியல் துறையின் படையணி ஒன்றிற்கு பொறுப்பாக நியமித்ததுடன் புலிகளால் மேற்கொள் ளப்பட்ட கட்டாய ஆட்சேர்ப்பின் பிரசார பணிகளிலும் பாப்பாவை ஈடுபடுமாறு பணிக்கிறார். பின்னர் கிளிநொச்சியில் இலங்கை விமானப் படையின் தாக்குதலில் தமிழ்செல்வன் கொல்லப்பட்டதை அடுத்து நடேசன் புலிகளின் அரசியல் துறைப்பொறுப் பாளராகிறார். இதைத் தொடர்ந்து உடனடியாகவே யுத்தம் ஆரம்பிக்கப் பட, பாப்பாவை நடேசன் கள முனைக்கு அனுப்பிவைக்கின்றார். ஏற்கனவே ஜொலியாக திரிந்த பாப்பா களமுனைக்கு அனுப்பப்பட்டவுடன் மனம் குழம்பியவராக கடுமையான விரக்தியையும் மனச் சோர்வையும் எதிர் கொள்கின்றார். படையினர் பல முனைகளின் ஊடாக தந்திர உபாய வழிமுறைகளைக் கையாண்டு புலி களின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் முன் னேற்ற முயற்சியை மேற்கொள்கின்ற னர். படையினர் முன்னேறத் தொடங் கிய போது தினமும் பல புலிப் போராளிகள் சாவைத் தழுவிக் கொண்டதுடன் மேலும் பலர் காய மடைந்து கள முனைகளில் இருந்து பின்னகற்றப் படுகின்றனர்.

இவ்வாறு தினமும் இழப்புக்களும் பின்னடைவுகளும் தொடர்ச்சியாக இடம்பெறத் தொடங்குகையில், பாப்பாவுடன் நின்ற பலரும் சாவைத் தழுவிக் கொண்டிருக்க, தனது சாவும் உறுதியாகி விட்டது என எண்ணிக் கொண்ட பாப்பா களமுனையில் இருந்து தப்பியோடவும் முடியாது வேறு காரணங்களைக் கூறி கள முனையை விட்டு வெளியேறவும் முடி யாது என்ற இக்கட்டான நிலையில் ஒரு வேலை செய்கிறார். அதாவது முன்னேறி வருகின்ற படையினருடன் மோதலில் ஈடுபட்டால் சாவு நிச்சயம் என்ற நிலையில் தன்னைத் தானே சுட்டுக் காயப்படுத்திக் கொண்டால் களமுனையில் இருந்து வெளியேறி இயக்கத்தின் மெடிக்ஸிலோ(பாமசி) அல்லது அரச மருத்துவ மனையிலோ கொஞ்சக் காலத்திற்கு சிகிச்சை பெற் றுக் கொண்டிருந்தால் உயிர் பிழைக்க லாம் என்ற முடிவிற்கு வருகிறார். படையினர் ஒரு அதிகாலை வேளை யில் சண்டையை ஆரம்பித்தபொழுது தன்னிடம் இருந்த மைக்ரோ பிஸ் ரலை(கைத் துப்பாக்கியை) எடுத்த பாப்பா தனது காலிலே இலக்குத் தவறாமல் கண்ணை மூடியவாறு சுட்டுக் கொண்டார். இவ்வாறு சுட்ட பாப்பா களமுனையிலே தான் காயம் அடைந்து விட்டதாக தனது பிரதான களமுனைத் தளபதிக்கு தெரியப்படுத்துகின்றார்.

பாப்பா காயம் அடைந்ததை இயக்கம் பெரிதாக பார்த்ததா? அல்லது பாப்பா வின் தந்திர முயற்சியை இயக்கம் கண்டுபிடித்ததா? என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சையை பெற்றுகொண்டு நாடு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நேற்றுமுன்தினம் ஜனாதிபதியை சந்தித்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுகொண்டார்.

# "13" சட்டத்தை நீக்குவது பாரிய சிக்கலை ஏற்படுத்தும்

(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்டத்தை நீக்குவது மாகாணசபை முறைகளில் பாரிய சிக்கலை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நீதித்துறை சார்ந்தவர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கத்துடன் ஒப்பிடும்போது அதனை திருத்துதல் அல்லது இல்லாது செய்தல் என்பன அரசாங்கத்துக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தின் கீழ் மாகாண சபைகளை நிர்வாகம் செய்வதில் மத்திய அரசாங்கத்துக்கு அதிகார ரீதியான எந்தப் பிரச்சினைகளும் இல்லை. ஆனால் இதனை மாற்றி அமைக்க முற்படும்போது இது தொடர்பில் பாரிய பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். 13ஐ மாற்றுவதற்கு எதிரான குழுக்கள் ஒன்றிணைவு.


அரசாங்கத்தில் உள்ள 13 ஆம் திருத்தச்சட்டத்தின் மீதான திருத்தத்துக்கு எதிரான குழுக்கள் ஒன்றிணைந்து பொது அணி ஒன்றை உருவாக்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து இந்த அணி உருவாக்கப்படவுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இடதுசாரிகள் கட்சிகள் போன்றன இவ்வாறான ஒரு அணியை உருவாக்கி பொது வேட்பாளர்களை களமிறங்க விருப்பதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் அந்தக் கட்சிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையங்கள் சுற்றிவளைப்பு



மொரகஹஹேன குடா உடுவ பிரதேசத்தில் வீடொன்றின் குளியலறையில் சட்டவிரோதமாக நடத்திச் செல்லப்பட்ட, பாரிய அளவிலான மதுபான தயாரிப்பு நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது 200 கசிப்பு பெரல்கள், 25 அடி நீள பிளாஸ்டிக் குழாய், காஸ் சிலின்டர், துருப்பிடித்த தகரம் உள்ளட்ட பல பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் குடாஉடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஹொராண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பாணந்துறை அருக்கோட பிரதேசத்தில், சட்டவிரோதமாக நடத்திச் செல்லப்பட்ட பெரிய மதுபான உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இதன்போது சட்டவிரோத மதுபான போத்தல்கள் 20, கோடா 1000 லீற்றர், காஸ் சிலின்டர், 500 லீற்றர் தண்ணீர் தாங்கி 2, உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரான பெண் ஒருவர் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிக்குகளை விசாரிக்க பிரத்தியேக நீதிமன்றம்



(கொழும்பு)

பிக்குகளுக்கு பிரத்தியேக நீதிமன்றம் ஒன்று வெகுவிரைவில் அமைக்க உத்தேசித்துள்ளதாக பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்

கண்டியில் இடம்பெற்ற தேர்தல் விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்றிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த விகாரைகள் மற்றும் பிக்குகள் தொடர்பான முறைப்பாடுகள், பிணக்குகள் போன்றவற்றைக் கையாள பொதுநீதிமன்றங்களுக்கு செல்லாமல் தீரத்துக்கொள்ள இந்நீதிமன்றங்கள் உதவும்.

அத்துடன் பௌத்த மத குருக்கள் கௌரவமிழக்காத வகையில் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு இத்தகைய நீதிமன்றங்கள் வழிவகுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தபால்மூல வாக்களிப்பு விபரம் பெற தொலைபேசி இலக்கம் அறிவிப்பு

(கொழும்பு)

1919 என்ற அரச தகவல் கேந்திர நிலையத்திற்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணபபப்படிவங்களை நிரப்புவதற்குரிய தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும் என தேர்தலகள் செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின்போது தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்கள் 1919 எனும் இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தேசிய அடையாள அட்டை இலக்கத்தை வழங்குவதன் மூலம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

தப்பால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதிக்கு முனனர் அந்தந்த தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## போதைப்பொருளை ஒழிக்க தயாராகிறது பொதுபல சேனா

(கொழும்பு)

போரின் போது உயிரிழந்தவர்களை விடவும் போதைப் பொருள் பயன்பாட்டினால் அதிகளவானவர்கள் உயிரிழப்பதாக பொதுபலசேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே போதைப் பொருள் இல்லாதொழிப்பு நடவடிக்கைகளை பொதுபல சேனா அமைபபு ஆரம்பிக்க உள்ளதாக அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்

போதைப் பொருள் பூமியாக மாற்றமடைந்துள்ள கொலன்னாவ பிரதேசத்திலிருந்து இந்த போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

போதைப்பொருள் வர்த்தகத்தின் பின்னணியில் முஸ்லிம் கடும்போக்காளர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதனால், 13 ஆம் திருத்தச் சட்டத்தை விடவும் ஆபத்தான பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.

பாரிய சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பங்குச்சந்தையில் இயங்கி வருகின்றன. இது தொடர்பிலான தகவல்கள் விரைவில் வெளியிடப்படும்.

நீதிமன்ற நிர்வாகப்பணிகளில் ஒன்றான தோளுக்கு முதலி என்னும் பதவிக்காக இந்த ஆண்டு 65 பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இதில் 51 பேர் முஸ்லிம்கள் அதிலும் 37 பேர் முஸ்லிம் பெண்களாவர். நாட்டின் சட்டம் ஒழுங்கு பாரியளவில் பாதிக்கப் பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருணாகல் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## மூக்கை கடித்தவர் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

அத்தனகல பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண வைபவம் ஒன்றில் அரச ஊடக நிறுவன ஊழியர் ஒருவரது மூக்கை கடித்து தாக்கியதாக கூறப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண தொகுதி அமைப்பாளர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

அரச ஊடக நிறுவன ஊழியரது மூக்கை கடித்து தாக்கியதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள துஷார ஹேமச்சந்திரவை அத்தனகல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

## தேடியது புதையல் கிடைத்ததோ கைவிலங்கு



(கொழும்பு)

அம்பாறை, இங்கினியாகல பொடகோல்ல பிரதேசத்தில் புதையல் அகழ முற்பட்ட ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அம்பாறை பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் இவர்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை கைதாகியுள்ளனர்.

இதன்போது புதையல் அகழ பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்கள் மற்றும் வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அம்பாறை பகுதியில் இருந்து கெப் வாகனம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

## புலிகளுக்கு ஆதரவளித்த ஐ.தே.க தேர்தலில் வெற்றிபெற முடியாது



(கொழும்பு)


புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஆதரவளித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற முடியாது என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் மேலும் வலுவிழக்கும். பிரபாகரனுக்கு பந்தம் பிடித்த ரணில் விக்ரமசிங்கவிடம் நாட்டை ஒப்படைக்க எவரும் தயாரில்லை. மகிந்த சிந்தனையே இந்த நாட்டு சாதாரண மக்களின் வாழ்க்கையாக அமைந்துள்ளது.

நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்து மக்களுக்கு நலன்களை வழங்கிய மிக முக்கியமான கொள்கையாக மகிந்த சிந்தனையை குறிப்பிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கினிகத்தேன பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கூட்டமைப்பின் நிலைமையை அவர்களே அம்பலப்படுத்தியுள்ளனர்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியம் பேசிய கூட்டமைப்பினர் அவர்களுக்குள் கோஸ்டிப் பூசல்கள் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் தற்போது தனித் தேசியம் பேசி மக்கள் முன் அம்பலப்பட்டுள்ளமையைக் பகிரங்கமாகக் காணக்கூடியதாக உள்ளது என பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

மருதங்கேணி பொது மக்களுடனான கலந்துரையாடல் கடந்த 19ஆம் திகதி மருதங்கேணி வடக்கு கிராம முன்னேற்றச்சங்கச் செயலாளர் வேலுப்பிள்ளை வேலாயுதம் பிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணசபைக்கு தற்போது வேட்புமனுக்கள் கோரப்பட்டுள்ளன. இந்நிலையில் முதலமைச்சர் வேட்பாளராக இலங்கைத்தமிழரசுக் கட்சியின் செயலாளரான மாவை.சேனாதிராஜா நிறுத்தப்படுவார் என அறிவிக்கப்பட்டது. அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையும் தீர்மானம் நிறைவேற்றி இரா.சம்பந்தன் ஐயாவுக்கு அனுப்பியிருந்தது.


இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திடீர் இளம் விசுவாசி ஒருவர் மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக கட்சி நிறுத்தாமல் விட்டால் தீக்குளிப்பேன் எனவும் ஊடகவியலாளர்களை அழைத்து பத்திரிகை மாநாடும் நடாத்தியிருந்தார். ஆனால் கட்சி அல்லாத ஓய்வூதிய நீதவான் ஒருவரை சம்பந்தன் ஐயா பலத்த இழுபறியின் பின் முதலமைச்சர் வேட்பாளராக நியமித்துள்ளார்.

மாவை.சேனாதிராஜா புறந்தள்ளப்பட்டு விரக்தியில் உள்ளார். அதேபோன்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வன்னி மாவட்டக்கிளையும் மிகக்கடுப்பில் உள்ளது. இதன் மூலம் வடமாகாண தமிழ் மக்களுக்கு வழிகாட்டக் கூடிய தகைமை மாவை. சேனாதிராஜாவிடம் இல்லை என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைகள் உறுதிபடக் கூறியுள்ளமையை மக்கள் கண்டுள்ளனர்.

கூட்டமைப்பினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 வேட்பாளர்களை பங்கீடு செய்யும் முயற்சி இன்று மூன்றாவது நாளாவும் தொடர்கிறது. கடந்த ஒவ்வொரு தேர்தல் சமயங்களில் வலுவாக தமிழ்த்தேசியம் பேசிய கூட்டமைப்பினர் வேட்பாளர்களை பங்கீடு செய்வதில் உள்ள இழுபறியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழுக்களைப் பற்றி விமர்சனம் செய்யும் போக்கும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் தற்போது தனித் தேசியம் பேசி மக்கள்முன் அம்பலப்பட்டுள்ளமையை பகிரங்கமாகக் காணக்கூடியதாக உள்ளது. எனவே மக்களாகிய நீங்கள் தெளிவான தெரிவுகளை இனிவரும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினர் தம்பிராசா மணீதரன் கலந்து கொண்டார்.

# ரம்ழான் நற்சிந்தனை



ரம்ழான் மாதத்தில் தன் பாவங்களுக்காக பாவமன்னிப்பு பெறாதவர், நபி(ஸல்) பெயரைக்கேட்டு ஸலவாத்து கூறாதவர், வயோதிப தாய்,தந்தையரை சொர்க்கத்தில் நுழைவிக்கக்கூடிய நல் அமல்களை செய்யாதவர்கள், நாசமடைவார்கள் என நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

நூல்:ஹாகிம் (105)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைக்காக நிறைவுகாண் சேவைக்கு முன் ஆரம்ப பயிற்சி பாடத்திற்காக சமனான சுகாதாரப் பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கானபாடநெறியும்,பட்டமுமாக மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்(விஞ்ஞானமாணி மருத்துவ இரசாயனவியலாளர் Bsc.mct) மருந்தாளர் (மருந்தாளர்(B.pham), மருந்தாளர் விசேடம) உடற்கூறு சிகிச்சை (உடற்கூறு சிகிச்சையாளர் (Bsc. physiotherapy),கதிரியக்கவியல்(கதிரியக்கவியலாளர், விஞ்ஞானமாணி) வயது 18இற்கும் 30இற்கும் உட்பட்டவர்கள் தேகாரோக்கியமுடையவராகவிருத்தல் வேண்டும்.

விண்ணப்பமுடிவு திகதி எதிர்வரும் 26ஆகும். விண்ணப்பப்படிவம், விண்ணப்பிக்கும்முறைகள், நியமனம், மற்றும் மேலதிக தகவல்களை 12.07.2013 அரசவர்த்தகமானியில் பார்வையிட முடியும். (105)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 25. 07. 2013




- அமெரிக்கப் பொருளாதார நெருக்கடியும் உலக பொருளாதாரமும்!
- ஆபிரிக்கப் பெண்களின் அவலம் பெண்மையைப் பறிக்கும் பாதகம்!
- கவிஞர் வாலியின் பயணங்கள்!
- கிழக்குப் பல்கலையில் குழப்பம்...
- தங்கச் சங்கிலியைப் பறிப்பதற்காக கழுத்தை வெட்டிப் படுகொலை!
- அவுஸ்ரேலிய அகதிமுகாமில் கலவரம்!



கடலோர கவிதைகள்

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்...

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# மீண்டெழுந்து தொடரை வசமாக்குவோம்



(லண்டன்)

மீதமுள்ள போட்டிகளில் முழுத்திறமையை வெளிப்படுத்தி, மீண்டெழுந்து ஆஷஸ் தொடரை கைப்பற்றுவோம் என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்ரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு டெஸ்டில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 2-0 என தொடரை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது டெஸ்ட் வரும் ஓகஸ்ட் 1ஆம் திகதி மான்செஸ்டர் நகரில் நடைபெறவுள்ளது. அவுஸ்ரேலிய அணி ஆஷஸ் தொடரை கைப்பற்ற, மீதமுள்ள மூன்று போட்டியிலும் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மைக்கல் கிளார்க் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், லோர்ட்ஸ் டெஸ்டில் 347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியைச் சந்தித்தது வருத்தம் அளித்தது. இருப்பினும் மீதமுள்ள போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, ஆஷஸ் தொடரை கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. கடந்த இரண்டு போட்டியில் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளும் பட்சத்தில், சுலபமாக வெற்றி பெறலாம்.

தற்போதுள்ள நிலையில், மூன்றாவது டெஸ்டில் வெற்றி பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இப்போட்டிக்கு இன்னும் 8 நாட்கள் இருப்பதால், அதற்குள் சிறந்த முறையில் தயாராக வேண்டும். கடந்த போட்டிகளில் கண்ட தோல்விக்கு துடுப்பாட்டத்தில் சோபிக்காதது முக்கிய காரணம். குறிப்பாக முதல் நிலை துடுப்பாட்ட வீரர்கள் பெரிய அளவில் சோபிக்காதது பின்னடைவாக அமைந்தது. ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக இருந்தும், அதிகளவு ஓட்டங்கள் சேர்க்க முடியாமல் போனது ஏமாற்றம் அளித்தது. முன்னிலையில் உள்ள ஏழு துடுப்பாட்ட வீரர்கள் சிறந்த வீரர்கள். ஆனால் தவறான ஹொட் அடித்து விக்கெட்டை பறிகொடுத்தது பாதிப்பை ஏற்படுத்தியது. எங்கள் அணியின் பந்துவீச்சு திருப்தி அளிக்கிறது. துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காததால், பந்து வீச்சாளர் மீது குறை கூற முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




## மனம் ஆறவில்லை

சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்றாலும், விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் அடைந்த தோல்வியை மனம் ஏற்கமறுக்கிறது என அமெரிக்காவின் ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தெரிவித்தார்.

தோல்வி என்பது எல்லோருக்கும் வரக்கூடியதுதான். அது பெரிய தொடர்களில் வரும்போது நிச்சயம் கவலையைத் தரும். விம்பிள்டன் தோல்வியிலிருந்து மீண்டபோதும், எனது மனம் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது.

சுவீடன் ஓப்பனில் வென்றது மகிழ்ச்சிதான். இருப்பினும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வெல்லக் கூடிய வாய்ப்பு எனக்கு அதிகம் இருந்ததை மறுக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிரிக்கெட்டுக்கு டாட்டா



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் 2007ஆம் ஆண்டுடன் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வுபெற்றார். இருப்பினும் அவர் முதலாவது ஐ.பி.எல். போட்டியில் விளையாடினார். அவுஸ்ரேலியாவில் நடைபெறும் பிக் போஸ் லீக் போட்டியில் வோர்ன் தொடர்ந்து விளையாடி வந்தார். அந்தப் போட்டியில் இருந்து விடைபெறுவதாக வோர்ன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். தான் விடைபெற இதுவே சரியான தருணம் என்று தெரிவித்துள்ள வோர்ன் தொழில் மற்றும் வர்ணனையாளர் பணியை கவனித்துக் கொண்டு விளையாடுவது கடினம் என்பதால் இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று கூறினார். 43 வயதான வோர்ன் 145 டெஸ்டில் விளையாடி 708 விக்கெட்டுக்களையும், 194 ஒருநாள் போட்டிகளில் 293 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொடரை வெல்வோம்

(சென். லூசியா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அனைத்து வீரர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் அதனை சாதிப்போம் என பாகிஸ்தான் அணியின் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார்.

நான்காவது ஒரு நாள் போட்டியில் வெற்றிபெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. மழைக்குப் பின்னர் உடனடியாக வெயில் அடித்ததால் துடுப்பாட்டம் செய்ய எளிதாக இருந்தது. நாங்கள் திட்டமிட்டபடி விவேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். யுனைட்கானின் பந்துவீச்சு நன்றாக இருந்தது. எனது துடுப்பாட்டம் மகிழ்ச்சி அளித்தது. இதே மனோநிலையுடன் தொடரை வெற்றிகொள்ள முயற்சிப்போம். துடுப்பாட்டம் பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்து வகையிலும் வீரர்கள் சிறந்து செயற்படுகின்றார்கள். ஐ.சி.சி.யின் சம்பியன்ஸ் கிண்ண தொடர் அமைந்த படுதோல்விக்குப் பின்னர் எழுச்சி பெற்றிருப்பது மகிழ்ச்சி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தோல்வி குறித்து கருத்துத் தெரிவித்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக் கப்டன் வெய்ன் பிராவோ கருத்து தெரிவிக்கையில், சாமுவேல்ஸ் அதிரடியாக ஆடி நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். இருப்பினும் இந்த ஆட்டத்தில் நாங்கள் வெற்றி பெறாமல் போனது ஏமாற்றம் அளிக்கிறது. கடைசிக் கட்ட பந்து வீச்சில் இன்னும் நாங்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும் எனத் தெரிவித்தார்.



## இந்தியா–சிம்பாப்வே இன்று முதல் ஆட்டம்

(ஹராரே)

இந்தியா- சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் சிம்பாப்வேயின் ஹராரேயில் இடம்பெறவுள்ளது. இலங்கை நேரப்படி இப்போட்டி 12.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்டின்சன் விலகல்



(லண்டன்)

ஆஷஸ் தொடரின் மீதமுள்ள போட்டிகளில் அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் முதுகு வலி காரணமாக பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முடிவின் பின்னர் ஜேம்ஸ் பட்டின்சன் தனது இடுப்பு, முதுகுப் பகுதிகளில் வலியை உணர்ந்ததாகவும் அதன் காரணமாக ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்கான் பரிசோதனைகளின் முடிவில் அவருக்கு உபாதை ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக அவர் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள எஞ்சியுள்ள ஆஷஸ் டெஸ்ட் போட்டிகளிலும் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

நிறைவடைந்த இரு போட்டிகளிலும் பட்டின்சன் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள ஜேம்ஸ் பட்டின்சன், துடுப்பாட்டத்தில் ஓரளவு சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

பந்து வீச்சு, துடுப்பாட்டம் ஆகிய இரண்டு துறைகளிலும் அசத்திய பட்டின்சனின் விலகல் அவுஸ்ரேலிய அணிக்கு மேலும் உளவியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்நிலையில் மீளமுள்ள மூன்று போட்டிகளிலும் பட்டின்சனை ஈடுசெய்யக்கூடிய வீரர்கள் அவுஸ்ரேலிய அணியில் தற்போது இல்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# அரையிறுதியில் ஜேர்மனி



(வாக்ஸ்ஜோ)

பெண்களுக்கான யூரோ கோப்பை கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு ஜேர்மனி அணி முன்னேறியது.


சுவீடனில், பெண்களுக்கான 11ஆவது யூரோ கோப்பை கால்பந்து நடைபெற்று வருகின்றது.

இதன் காலிறுதியில் நடப்பு சம்பியன் ஜேர்மனி, இத்தாலி அணிகள் மோதின. ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் லாவ்தெர் முதல் கோல் அடித்தார். இதற்கு இத்தாலி அணி வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் ஜேர்மனி 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் கடைசி நிமிடம், வரை போராடிய இரு அணி வீராங்கனைகளால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ஜேர்மனி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு காலிறுதியில் சுவீடன், ஐஸ்லாந்து அணிகள் மோதின. இதில் கோல் மழை பொழிந்த சுவீடன் அணி 4-0 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. இன்று நடைபெறவுள்ள அரையிறுதியில்சுவீடன், ஜேர்மனி அணிகள் மோதுகின்றன.





தெல்லிப்பழை துர்க்காபுரம் திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் நிலைய முன்றலில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் பல போட்டி நிகழ்வுகள் பார்வையாளர்கள், விருந்தினர்களை மெய்சிலிக்க வைத்தது. இறுதியில் போட்டி நிகழ்வில் பங்குபற்றி அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. நிலையத் தலைவர் ஆ.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), வலிவடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் இ.ஜெயபாலசிங்கம் (அன்பு), முன்பள்ளி இணைப்பாளர் செல்வரஞ்சனா, தெல்லிப்பழை பனை தென்னை வள அ.கூ.சங்க பொதுமுகாமையாளர் சிவஞானம், கூட்டுறவுச் சங்க தலைவர் அருணகிரிநாதர் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 53 ஓட்டங்களால்
## வென்றது யாழ். மத்திய கல்லூரி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 53 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 3.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜன் 32, மதுஷன் 36, கோமேதகன் 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரவீந்த் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 207 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி அணி 34.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜிவேஸ் 55 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தனுஜன் நான்கு, நிதுஷன் மூன்று, கோகுலவர்ணன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ள யாழ். மத்திய கல்லூரி அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இரண்டாவது சுற்றி லும் சாதித்து மூன்றாவது சுற்றக்கு முன்னேறுவது தமது நோக்கம் என அதன் பயிற்சியாளர் தெரிவித்தார் (எஸ்.பி.)

# மட்டுவில் வளர்மதியின் ஆண்டு நிறைவு கரப்பந்து
## அச்சுவேலி கலைமதி, ஆவரங்கால் மத்தி சம்பியன்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அச்சுவேலி கலைமகள் மற்றும் ஆவரங்கால் மத்தி அணிகள் கைப்பற்றிக் கொண்டது.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இரு பிரிவுகளில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் நடாத்தப்பட்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

ஏ, பி என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்புோட்டித் தொடரின் இதன் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்றது.

பி பிரிவுக்கான இறுதிப் போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணியும், புத்தூர் நவக்கிரி ஜொலிபைற்ஸ் அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் இரு அணிகளும் செயற்பட்டன. இருப்பினும் இறுதி வரை உற்வேகத்துடன் செயற்பட்ட அச்சுவேலை கலைமகள் அணி 2-1 என்ற செட் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் சிறந்த வீரராக புத்தூர் நவக்கிரி ஜொலிபைற்ஸ் அணியைச் சேர்ந்த சுஜீபன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற ஏ பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆவரங்கால் மத்தி அணி ஆதிக்கம் செலுத்தியது. ஆவரங்கால் மத்தி வீரர்கள் ஆட்டம் இரசிகர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்திருந்தது. இறுதியில் ஆவரங்கால் மத்தி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் சிறந்த வீரராக சொரூபன் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டி நிகழ்வில் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

விளையாட்டு செய்திகள்

# 25ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு பொலனறுவையில் நாளை ஆரம்பம்
### அசத்துவார்களா? வடக்கு வீரர்கள்

(பொலனறுவை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இலங்கை இளைஞர் சம்மேளனம் மற்றும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து நடத்தும் 25 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா நாளைதொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை பொலனறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பலர் பங்குகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வுக்கென இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 3000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இவ்விளையாட்டுப்போட்டியின் ஒலிம்பிக் தீபத்தை 2009ஆம் ஆண்டு ஆசிய கனிஷ்ட விளையாட்டுப் போட்டியில் இலங்கை சார்பாக பிரதிநிதித்துவப்படுத்திய 2009ஆம் 2010 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் போட்டியில் சாதனை நிலைநாட்டிய பொலனறுவை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். வீரசேகர 2009, 2010ஆம் மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் கனிஷ்டமெய்வல்லுநர் போட்டியில் பங்கேற்றவரும் 2012ம் ஆண்டு தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல் போட்டியில் சாதனை நிலை நாட்டிய அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விஜேசிங்க ஆகியோர் ஏற்றுவர்.

இதேவேளை இவ்விளையாட்டுப் போட்டி 20 வயதுக்கு மேற்பட்ட 20 வயதுக்கு உட்பட்ட பிரிவினர் பங்கு கொள்ளுகின்றனர்.

ஆண்கள், பெண்கள் கலந்துகொள்ளும் 64 போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

வலைப்பந்தாட்டம் (பெண்கள்) கயிறு இழுத்தல் ஆண்கள், பெண்கள், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், (ஆண்கள், பெண்கள்) என்பன இறுதிப் போட்டியாக இடம்பெறும் எனத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா தெரிவித்தார்.

இவ்விளைஞர் விளையாட்டுப் போட்டியில் புதிய சாதனை நிலைநாட்டும் முதலாவது வீர, வீராங்கனைக்கு கார் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

இதேவேளை 2 வயதுப் பிரிவிலும் சாதனை நிலை நாட்டும் முதல் நான்கு வீரர்களுக்கு மோட்டார் சைக்கிள் பரிசாக வழங்கப்படும் எனவும் மன்றத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் போட்டி நிகழ்வில் புதிய சாதனை நிலைநாட்டும்வீர,வீராங்களைக்கு 10ஆயிரம்ரூபா பரிசு வழங்கப்படும். அத்துடன் வெற்றி பெறும் மாவட்டத்திற்கு ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம்ரூபாவும் கிண்ணமும் வழங்கப்படும்.2ம் இடம் பெறும் மாவட்டத்திற்குஒரு இலட்சம் ரூபாவும் கிண்ணமும் வழங்கப்படும். (93)

# கால்பந்தை மேம்படுத்த சம்மேளனம் நடவடிக்கை

(கொழும்பு)

கால்பந்தாட்டப் போட்டியை முன்னெடுக்கும் நோக்கில் பல்வேறு செயற்திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் ரொட்ரிகோ தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் பல்வேறு சாதகமான நடவடிக்கைகளை இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் முன்னெடுத்துள்ளது.

சர்வதேச ரீதியில் கால்பந்தாட்டச் சம்மேளனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறது. இலங்கையில் கால்பந்தாட்டத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உலகின் முதன்மை விளையாட்டு கால்பந்தாட்டம் என்றால் அது மிகையில்லை. அந்த விளையாட்டை இலங்கையிலும் சாதிக்கக்கூடிய ஒரு அணியை உருவாக்கவேண்டும் என்பதே எமது நோக்கம். அதற்கான கிராம மட்டத்திலிருந்து இளைஞர், யுவதிகளை இனங்கண்டு அவர்களுக்கான போதிய வசதி வாய்ப்புகளை செய்து கொடுக்கப்படும் பட்சத்திலேயே அவர்களை சிறந்த, தரம் மிக்க வீரர்களாக உருவாக்கிக் கொள்ள முடியும். அதற்கான திட்டங்கள் எமது சம்மேளனத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விரைவில் அதனை நடைமுறைப்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த கால்பந்து அணியை உருவாக்குவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மனித உயிரைக் காக்கும் வெளவால்கள்

- ஆர். ஆனந்த் -

பாலூட்டிகளின் பெரும்பாலான இனங்கள், அழிந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். உலகில் ஒரு இலட்சம் பாலூட்டிகள் இருந்ததாகவும் தற்போது நாலாயிரம் மட்டுமே இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. இந்த எண்ணிக்கையில் உள்ள பாலூட்டிகளில் ஏறக்குறைய நான்கில் ஒருபகுதி இனங்களைக் கொண்டது வவ்வால் இனம்.

“பறக்கக்கூடிய” தன்மையைப் பெற்ற, ஒரே பாலூட்டி இனம் வவ்வால் மட்டுமே. வவ்வால்கள் அதிசயத்தக்க தன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளன. இரவில் விழித்து, பகலில் பதுங்கி, மனிதன் நலமுடன் உயிர் வாழ பல உதவிகளை செய்யும் வவ்வால் இனம், கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவதாக பறவை ஆராய்ச்சி வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகில் சுமார் 1,200 வகை வவ்வால்கள் உள்ளன. துருவப் பகுதி தவிர மற்ற எல்லா இடங்களிலும், வவ்வால்களை காண முடியும். இவற்றில் பழம் தின்னி, பூச்சிதின்னி என, இருவகை உள்ளன. இவற்றை எளிதில் வித்தியாசம் காண முடியும்...

பழம் தின்னிகள்: பெரிய கண்கள், குழல் போன்ற மூக்கு, சிறிய காது, இறக்கைகளுக்கு இடையே 20 செ.மீ. நீளம், 70 கிராம் எடை யில் இருக்கும். பறக்கும் நரி போல் தோற்றமளிக்கும் இவ்வகை வவ்வால்கள், இந்தியாவில் காணப்படுவன. இவை 6 அடி நீளம் 2 கிலோ எடை வரை இருக்கும். இவை தேன், பூ இதழ்கள், மகரந்த தூள், அழுகிய பழங்களைச் சாப்பிடும்.

பூச்சி தின்னிகள்: மிளகு போன்ற சிறிய கண்கள், ரேடார் பேசின் போன்ற காதுகள், தட்டையான மூக்குடன் 6 முதல் 20 செ.மீ. நீளம். 15 முதல் 60 கிராம் எடை-யுடன் காணப்படும். இவற்றில் மிகச் சிறிய வகையைச் சேர்ந்த மூங்கில் வவ்வால்கள் பிலிப்பைன்ஸ் தீவில் காணப்படுகின்றன. இவற்றின் இறக்கைக்கு இடைப்பட்ட நீளம் 1.5 அங்குலம். 1.5 கிராம் எடை மட்டுமே இருக்கும். இவை மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் வண்டு, பூரான், தேள், பல்லி, எலி போன்றவற்றை உணவாக உட்கொள்ளும்.

இரத்தம் குடிக்கும் வவ்வால்கள்: மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் மட்டும், இரத்தம் குடிக்கும் “வம்பயர்” இனத்தை சேர்ந்த வவ்வால்கள் காணப்படுகிறது. இவற்றால் மனிதனுக்கு எந்த தீங்கும் இல்லை. மிருகங்களின் இரத்தத்தை மட்டுமே, அதுவும் ஒரு தடவைக்கு 20 மி.லீ. மட்டுமே குடிக்கிறது. இவற்றின் வாயில் சுரக்கும் உமிழ் நீரிலிருந்து, மனிதர்களுக்கு ஏற்படும் இதய சம்பந்தமான நோய்க்கு, “டெஸ்மட்டோபிளாஸ்” என்ற மருந்து தயாரிக்கப்படு கிறது. இது மூளைக்கு செல்லும் இரத்தம் தடைப்படுவதை தடுக்கவும், காயங்களிலிருந்து வெளியேறும் இரத்தத்தை விரைவில், உறைய வைக்கவும் பயன்படுகிறது.

வவ்வால்கள் கூட்டமாக வாழக்கூடியவை. ஒரு சதுர அடியில் நூற்றுக்கும் மேல் இருக்கும். அமெரிக்காவின் டெக்சாசில் பிராகன் குகையில், 40 மில்லியன் வவ்வால்கள் வசிக்கின்றன. இவை கூட்டமாக பறக்கும் போது கரும் புகை போல் காணப்படும். தினமும் 55 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று நாலா திசையிலும் உணவு தேடுகின்றன. மெக்ஸிகோவில் வாழக் கூடிய, “மஸ்டிப் வவ்வால்கள்” ஒரு இரவில் 250 தொன் பூச்சி, வண்டு மற்றும் நுளம்புகளை உணவாக உண்ணுவதாக கண்டறிந்துள்ளனர். சிறிய பழுப்பு நிற வவ்வால்கள் ஒரு மணி நேரத்தில் 600 நுளம்புகள் வரை பிடித்து உண்ணக் கூடியவை.



வவ்வால்கள் பழங்களை உண்பதால் அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெற பெரிதும் துணை செய்கின்றன. இன்றைய சூழ்நிலையில் காடுகள் பெருவாரியாக அழிக்கப்படு வதாலும், பாறைகள் வெட் டப்பட்டு வருவதாலும், உலக அளவில் தற்போது ஏற்பட்டுள்ள பருவ நிலைக் கோளாறு காரண மாக கோடிக் கணக்கான ஹெக்டயர்களில் ஏற்படும் காட்டுத்தீயாலும் மிக வேகமாக வவ்வால் இனங்கள் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன.

இயற்கை வளத்தை காப்பதுடன், உயிர் காக்கும் மருந்து தயாரிக்க பயன்படும் வவ்வால்களை காக்க, குறைந்த பட்சம் இயற்கை வளத்தை மனிதன் அழிக்காமல் இருந்தால் போதும்.

---

◗ கமல்ஹாசன் விஸ்வரூபம் - 2 பட... அடுத்து லிங்குசாமி தயாரிப்பில், உத்தம வில்லன் என்ற படத்தை இயக்கி நடிப்ப... கூறப்பட்டது. ஆனால், இப்போது அப்ப... நடிகர் ரமேஷ் அரவிந்த் இயக்குவதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, கமலுடன், சதிலீலாவதி, பஞ்சதந்திரம் மற்றும் மன்... அம்பு உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள ரமே‘ அரவிந்த், அந்த படங்களைப் பே... நகைச்சுவை கலாட்டாவாக இப்படத்தை... தருவாராம். இதில் நடிக்க காஜல் அகர்... மறுத்துவிட்டநிலையில், இப்போது வே... சில முன்னணி நடிகைகளுக்கு அழைப்... விடுத்துள்ளார்.

◗ விஜய் நடித்துள்ள தலைவா படத்... முதலில் தலைவன் என்று தான் பெயர்... வைத்திருந்தனர். அதே பெயரில், இன்... படம் எடுக்கப்பட்டு வருவதை அறிந்து, தலைவா என்று மாற்றினர். பெயரைப் பார்த்து, அரசியல் படமா? என்று கேள்வி கிளம்பியுள்ளது. “இப்படத்துக்கும், அரசியலுக்கும், எந்த சம்பந்தமும் இல்லை. இது தாதாக்களை, ஒருவன் அழிக்கும் கதை. அப்படி அழித்து சாதாரண் மக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுப்தால், அம்மக்கள் விஜய்யை தங்களது தலைவனாக்குகின்றனர்...” என்கிறார் படத்தின் இயக்குனர் விஜய்.

◗ விடாமுயற்சி விஸ்வருப வெற்றியைத் தரும். இதுதான் என்னுடைய தாரகமந்திரம் என்கிறார் ஜாக்குலின் ஃபெர்னாண்டஸ். தற்போது இவர் இருப்பது மலைப்பாங்கான மாக்... பிரதேச...ல். அங்குதான் “பங்கி ஜம்ப்” செய்வதற்கு... இயற்கையான சூழ்நிலைகள் இருக்கிற... “பங்கி ஜம்ப்” என்றால் ஒரு திரைப்பட... நடிகர் விஜய் டூப் போடாமல் கால்கள... கயிறைக் கட்டிக் கொண்டு தலைகீழா... குதிப்பாரே... அந்த வீர விளையாட்டு...

◗ “டில்லி பெல்லி” ஹிந்திப் படத்... நடித்ததின் மூலம் பொலிவுட்டையே தி... பார்க்கவைத்தவர் பூர்ணா ஜகன்னாதன்... கவனம் முழுவதும் தற்போது அமெரி... தயாராகும் “நிர்பயா” டிவி தொடரில் நடிப்பதுதானாம்! சமீபத்தில் டெல்லியி... மருத்துவ மாணவி நிர்பயாவுக்கு நேர்... வன்கொடுமையை விளக்கும் தொடர்...

◗ புகழ்பெற்ற இத்தாலி நடிகையா...

---

# பிழையின்றித் தமிழ் 34

- ஞானச்செல்வன் -

ஒரு தமிழ் ஆர்வலர் நம்மிடம் பேசும்போது பலமுறை இப்படிச் சொல்லியுள்ளார்: “வடச்சொல் கலவாமல் பேச வேண்டும்..” ஐயா, இது வடச்சொல் அன்று; வடசொல் என்று அழுத்தாமல் சொல்லுங்கள் என்று நாமும் பலமுறை சொல்லிவிட்டோம். மனிதர் மாற்றவில்லை. என் செய்வது? அவருக்கு லகர, ளகர உச்சரிப்பும் சரியாக வருவதில்லை. புளி வாளைப் பிடித்த கதைதான் என்றாரே ஒருநாள். சிரிப்புத்தான்; வேதனைச் சிரிப்பு. புலி - புளியாகவும், வால் - வாளாகவும் அவர் ஒலிப்பில் மாறி நம்மைக் கொல்கின்றன.

இந்த நிகழ்வுகள் யாவும் உண்மையில் நிகழ்ந்தவை. ஒன்றும் கற்பனையன்று. சற்றே அக்கறையோடு முயன்றால் இத்தகைய பிழைகளைத் தவிர்த்துப் பேச முடியும். எழுத முடியும்.

அண்மையில் ஒரு கோவிலுக்குச் சென்றிருந்தோம்.

“பக்தர்கள் தவரவிடும் பொருள்களுக்கு ஆலய நிர்வாகம் பொருப்பல்ல” என்று பலகையில் எழுதி வைத்துள்ளார்கள். எல்லாரும் தமிழை முறையாகப் படித்திருப்பார்கள் என்று சொல்ல முடியாதுதான். ஆனால் ஒரு பட்டதாரியான செயல் அலுவலர் அங்கிருப்பாரே - அவர் பார்த்திருக்கமாட்டாரா? பார்த்தும், அவருக்கும் தவறு தெரியவில்லையா?

“பக்தர்கள் தவற விடும் பொருள்களுக்கு ஆலய நிர்வாகம் பொறுப்பன்று” எனத் திருத்தி எழுதுங்கள் என்று எழுதிக் கொடுத்து வந்தோம். திருத்தி எழுதியிருப்பார்களா?

ஓர் இலக்கியக் கூட்டம். நாம் தலைமையேற்றிருக்கிறோம். கல்வியின் சிறப்பு, மேன்மை பற்றி பேசினார் ஒருவர்.

“யாதானும் நாடாமல் யாதானும் ஊராமல்

சாந்துணையும் கல்லாதது ஏன்?”

என்று திருக்குறளைச் சிதைத்து வினாவெழுப்பினார். நாடாமல் - விரும்பாமல், தேடிச் செல்லாமல், ஊராமல் - என்ன பொருள் என்றே சொல்ல முடியவில்லை. (ஊர்ந்து செல்லாமல் எனலாமோ?)

“யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு” என்பது திருக்குறள்.

கற்றவர்க்கு எல்லா நாடும் எல்லா ஊரும் தம் சொந்த நாடாகவும், சொந்த ஊராகவும் ஆகிவிடும். அவ்வளவு சிறப்புமிக்க கல்வியைச் சாகும் வரையில் ஒருவன் கல்லாதிருப்பது ஏன்?

நாடு+ஆம்+ஆல். ஆல் என்ப்து அசை நிலை (பொருளற்றது)

ஊர்+ஆம்+ஆல். ஆல் என்பது அசைநிலை. நாடாம், ஊராம் என்பது பொருள்.

**கையெழுத்தும் கையொப்பமும்**

“கடிதத்தில் கிருஷ்ணமூர்த்தியின் கையெழுத்து இல்லை. என்றாலும் அவரது கையெழுத்தையும், கடிதத்தில் உள்ள கையெழுத்துகளையும் சரி பார்த்தபோது இரண்டும் பொருந்தி வருவதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்” - இது பத்திரிகைச் செய்தி.

இச்செய்தியில் கையெழுத்து எனும் சொல் இரண்டு பொருளில் ஆளப் பட்டுள்ளது. ஆனால் புரிந்து கொள்ள இயலாதவர்க்கு ஒரே குழப்பமாக இருக்கும்.

இதனை: கடிதத்தில் கிருஷ்ணமூர்த்தியின் கையொப்பம் இல்லை என்று மாற்றிவி...ல் செய்தி தெளிவாகிவிடும். கையொப்பத்தையும் கையெழுத்து என்று எழுதுவதால் குழப்பமே உண்டாகும். ஒருவர் ஒரு கடிதம் எழுதுகிறார். கடித வாசகம் அவர்தம் கையெழுத்தினால் ஆனது. அவ்வாசகத்தின் முடிவில் தம் பெயரை ஒப்பமிடுகிறாரே - அது கையொப்பம்.

**உண்மை, வாய்மை, மெய்ம்மை**

இம்மூன்றும் ஒன்று போலத் தோன்றும் சொற்கள். ஆனால் வேறுபாடு உண்டு. இம்மூன்றாலும் மனிதன் தவறின்றி வாழ வேண்டும். இதனை “மன, மொழி, மெய்களால் தவறாது நடப்பேன்” என்று உறுதி கொள்ள வேண்டும் எனச் சான்றோர் உரைத்தனர். (மனோ, வாக்கு, காயம் என்பது வடமொழி) உள்ளத்தில் பொய்யின்றி ஒழுகுதல் உண்மை, உள்ளத்தில் உள்ள உண்மை மாறாமல் வாய் வழியாக - சொல்லாக - பேச்சாக வெளிப்படுவது வாய்மை. வாய்மை மொழி மாறாமல் நடப்பது மெய்ம்மை (மெய்- உடம்பு- செயற்படுதல்)

உள்ளத்தில் இருப்பது உண்மை.

வாய்வழி வருவது வாய்மை.

மெய்யால் (உடலால்) செயற்படுவது மெய்ம்மை.

---

பதினாறும் பெற்றுப் பெறுவாழ்வு வாழ்க!

**(1) புகழ், (2) கல்வி, (3) வலிமை, (4) வெற்றி, (5) நன் மக்கள், (6) பொன், (7) நெல், (8) நல் விதி, (9) நுகர்ச்சி, (10) அறிவு, (11) அழகு, (12) பெருமை, (13) இனிமை, (14) துணிபு, (15) நோயின்மை, (16) நீண்ட ஆயுள்.**

## சினிமா சினிமா

பியா லோரனுக்கு இன்றைக்கு வயது 78. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் நடிக்க வருகிறார். அவருடைய மகன் எடோர்டோ பான்டியின் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் இந்தப் படம் உருவாக இருக்கிறதாம்.

◗ இந்தியாவில் மட்டுமல்லாது பாகிஸ்தானிலும் வெகுவாக கொண்டாடப் பட்ட ஹிந்தி நடிகை மாதுரி தீட்சித், அமெரிக்காவில் உள்ள டாக்டரை மணந்த பிறகு சிறிது காலம் ஒதுங்கியிருந்தார். இப்போது பழையபடி இந்தியா திரும்பி சினிமா, டிவி என்று கலக்கி வருகிறார். "நடன மங்கை, நடிகை, மனைவி, அம்மா என எல்லா ரோல்களையும் நான் ஒருத்தியே ஏற்று வெற்றிகரமாகச் செயல்படுகிறேன். இன்றைய பெண்கள் இப்படி பல வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களின் ரோல் மொடலாக நான் இருக்கிறேன்" என்று பெருமையாகக் கூறுகிறார் மாதுரி தீட்சித்.










◗ அஜித் நடிக்க விஷ்ணுவர்தன் இயக்கும் படம் கிட்டத்தட்ட முடிந்து விட்டது. ஆனால் இதுவரை பெயர் வைக்கப்படவில்லை. படத்தின் பெயர் "வலை" என்று முதலில் சொல்லப்பட்டது. பின்னர் "தல 53" (அஜித்தின் 53 ஆவது படம்) என்றார்கள். அதுவும் இல்லை என்று தற்போது "பறவை" என்று பெயர் வைத்திருப்பதாக சொல்கிறார்கள். இப்பெயரும் உறுதிதானா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

◗ ஷாருக்கான் நடித்துள்ள "சென்னை எக்ஸ் பிரஸ்" ஹிந்திப் படத்தின் "பான் கி டில்ட்டி உதா உதா ஹை" பாடல்தான் தற்போது சூப்பர் ஹிட் பாடல். இப்பாடலைப் பாடியிருப்பவர் சின்மயி. இசை விஷால் - சேகர் இரட்டையர். அவர்கள், "குரு" படத்தில் "தேரா பீனா" பாட்லைப் பாடிய பாடகிதான் இந்தப் பாடலைப் பாட வேண்டும்" என்று சொல்லி சின்மயியைப் பாட வைத்திருக்கிறார்கள்.

◗ தமிழ்த் திரையுலகில் படத் தலைப்புக்கு பஞ்சம் ஏற்பட்டு வைத்த பெயரையே மீண்டும் வைத்து வருவது தெரிந்ததே! ஆனால் புதிதாக ஒரு படத்துக்கு பெயர் என்ன தெரியுமா? "மேல ஏறி வாரோம்... அட ஒதுங்கி நில்லு!" முழுநீள நகைச்சுவைப் படமாம்! இனிகோ பிரபாகர், எம்.எஸ். பாஸ்கர், பரோட்டா சூரி போன்றோர் நடிக்கிறார்கள். ஏற்கெனவே இரண்டு படங்களை எடுத்து பெருத்த நஷ்டம் அடைந்த இந்தப் படத்தின் தயாரிப்பாளர், சென்டிமென்டாக இப்படி பெயரை வைத்துள்ளாராம்! இது எப்படி இருக்கு..?

## நம்பிக்கை



"ஏன் இவ்வளவு தாமதம்..." என்று சினந்தார் துறவி.

"நான் என்ன சுவாமி செய்வேன்... ஆற்றைக் கடந்து வர வேண்டியுள்ளது! படகுக்காரன் குறித்த நேரத்தில் வருவதில்லையே..." என்று பயபக்தியோடு மொழிந்தாள், அவருக்கு பால் கொண்டு வரும் பால்காரி.

துறவியின் கோபம் தணியவில்லை.

"என்ன... படகுக்காகவா காத்திருக்கிறாய்? இறைவனுடைய பெயரைச் சொன்னால் சம்சார சாகரத்தையே தாண்டி விடலாமே! அப்படி இருக்கும்போது, அவனுடைய பெயரைச் சொல்லி, இந்த ஆற்றை கடந்து வர முடியாதா..." என்று முழங்கினார்.

அவர் வார்த்தையை உள் வாங்கிக் கொண்ட பால்காரி, மௌனமாகத் திரும்பினாள்.

அடுத்த நாள் முதல் குறித்த நேரத்தில் பால் வந்தது. சாதுவுக்கு ஒரே மலைப்பு!

"இப்பொழுதெல்லாம் நேரம் தவறாமல் எப்படி வருகிறாய்?" என்று ஒரு நாள் அவளிடம் கேட்டார்.

"நீங்கள் உபதேசித்தபடி, கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மீது நடந்து வருகிறேன்..." என்றாள்.


சாதுவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. நேராகவே இதைப் பரிசோதிக்க, பால்காரியுடன் ஆற்றுக்கு புறப்பட்டார்.

கடவுள் பெயரைச் சொல்லியபடி, ஆற்றின் மேல் ஒய்யாரமாக நடந்து போனாள் பால்காரி.

ஆயிரம் பெயர்களால் கடவுளைக் கூவிக் கொண்டே ஆற்றில் அடியெடுத்து வைத்த சாது, அடுத்த வினாடி, நீரில் விழுந்தார்.

"ஐயா... கடவுள் பெயரை சொல்லுகிற போது, உங்களுக்கு எதற்கு சந்தேகம் வந்தது? வேட்டி நனைந்து போகுமே என்று கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டீர்களே... உங்களுக்கு கடவுள் பெயரில் நம்பிக்கை ஏற்படவில்லை என்று தெரிகிறது..." எனக் கூறியபடியே மேற்கொண்டு நடந்தாள் பால்காரி...

## பிள்ளையின் படத்திற்கு 25 கோடி!



ஹொலிவுட் நடிகர், நடிகைகளை விட, அமெரிக்காவில், இப்போது "டிவி" நிகழ்ச்சிகளில் வரும் நடிகைகளுக்குத் தான், மக்களிடம் அதிக செல்வாக்கு உள்ளது. இவர்களில், கிம் கர்தாஷியானுக்கு முக்கிய இடம் உண்டு.


ஒரு சில ஹொலிவுட் படங்களில் நடித்துள்ள இவர், ஏற்கனவே இரண்டு முறை திருமணம் செய்து, விவாகரத்து பெற்றவர். இதன்பின்னர் அமெரிக்காவின் பிரபல பொப் பாடகர் கேனி வெஸ்ட்டுடன் சேர்ந்து வாழ்ந்து, சமீபத்தில் ஒரு பெண் குழந்தையை பெற்றுள்ளார்.

இந்தக் குழந்தையின் புகைப்படத்தை வெளியிட, அமெரிக்க மீடியாக்களிடையே, கடும் போட்டி நிலவுகிறது. ஒரு, "டிவி" நிறுவனம், "12 கோடி ரூபா தருகிறோம். குழந்தையின் புகைப்படம் அல்லது வீடியோவை எங்களுக்கு தாருங்கள்..." என, கேட்டது.

இதனால், குழந்தையின் புகைப்படத்தை வைத்து, பணம் புரட்ட முடிவு செய்துள்ளார் கிம். தன் குழந்தையின் புகைப்படத்தை வெளியிட, 25 கோடி ரூபா வரை பேரம் பேசி வருகிறார். இன்னும், பேரம் படியவில்லை.

பிறந்த, ஒரு சில நாட்களிலேயே, வி.ஐ.பி. அந்தஸ்தை பெற்றுள்ள அந்த குழந்தையின் பெயர் என்ன தெரியுமா? நோர்த் வெஸ்ட்.

## சிவப்புச் செய்திகள்!



- செவ்வாய் கிரகத்துக்கு "சிவப்பு கிரகம்" என்ற பெயரும் உண்டு.
- வியட்நாமில் சிவப்பு நதி என்று ஒரு ஆறு உள்ளது.
- சிவப்பு புத்தகம் என்ற நூலை எழுதியவர் மாசேதுங்.
- செங்கடலுக்கு அருகில் சூயஸ் கால்வாய் உள்ளது.
- செஞ்சதுக்கம் மொஸ்கோவில் உள்ளது.
- காண்டமிருகம் சிவப்பு நிற வியர்வையை வெளிவிடும்.
- லாக்கா பூச்சியின் செந்நிறப் பிசின்தான் அரக்கு.
- சிவப்பிந்தியர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.
- தடை செய்யப்பட்ட நூல்களை சிவப்பு புத்தகங்கள் என்று அழைப்பர்.
- ஓவியர்கள் பெரிதும் உபயோகிப்பது சிவப்பு வண்ணமே!

## மக்கள் பார்வைக்கு அரண்மனை!

இந்த ஆண்டோடு, இங்கிலாந்து அரசியாக இரண்டாம் எலிசபெத் பதவி ஏற்று, 60 ஆண்டுகள் நிறைவடைகிறது. அதனை கொண்டாடும் விதமாக, லண்டனில் ராணி வசிக்கும் பக்கிங்காம் அரண்மனையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விடப் போகின்றனர்.

ஆகஸ்ட் 3ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 29ஆம் திகதி வரை பொது மக்கள் சுற்றிப் பார்க்கலாம். பெரியவர்கள் மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகள் கொண்ட குடும்பத்துக்கு கட்டணம் 50 பவுண்ஸ். பெரியவர்களுக்கு 17 பவுண்ஸ்ும், 17 வயதிற்குட்பட்டோருக்கு 10 பவுண்ஸ்ும் கட்டணம். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசம்.

அரண்மனையில் அரச குடும்பத்தினர் வசிப்பதுடன், அவர்கள் சார்ந்த அலுவலகமும் இயங்கி வருகிறது. அரண்மனையிலுள்ள 19 அறைகள், பிரத்யேகமாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. உலகின், மிகப் பிரபலமான ஓவியர்கள் தீட்டிய அழகான ஓவியங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் இடம் பெற்றுள்ளன. அத்துடன், அரச குடும்பத்தினர் பயன்படுத்திய ஆடைகள் மற்றும் பொருட்களுடன், இரண்டாம் எலிசபெத் பயன்படுத்திய ஆடைகள் மற்றும் அணிகலன்களும் பார்வைக்கு வைக்கப்படும்.



பக்கிங்காம் அரண்மனைக்கு வெளியே, கண்ணைக் கவரும் இரு தோட்டங்கள். இவற்றில், பல நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட 350 வகையான பூமரங்கள் உள்ளன. இதற்கு தெற்கே, மிகப் பெரிய ஏரி. இதில், படகு சவாரிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரண்மனையை சுற்றிப் பார்க்க, மூன்று மணி நேரம் ஆகுமாம்.

# பூட்டு திருடன்

என்.விநாயகமுருகன்



எங்கள் அலுவலகத்தில் வருடந்தோறும் ஏதாவதொரு தொழில்நுட்ப மாநாடு நடக்கும். உலகெங்கும் இருக்கும் தலைசிறந்த கணினி தொழில்நுட்ப ஆட்கள் ஒரு இடத்தில் ஒன்றாக கூடுவோம். அங்கு அவர்களது அனுபவங்களை புதிய தொழில்நுட்பங்களை விவாதிப்பார்கள். இம்முறை மூன்று நாட்கள் நடந்த மாநாட்டில் இரண்டாம் நாள் நிக்கி சௌ வந்திருந்து மென்பொருள் பாதுகாப்பு பரிசோதனை (Software Security Testing) என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அன்று ஐந்து பேர் மாநாட்டில் பேசினார்கள். ஆனால் நிக்கி சௌதான் அங்கு எல்லோருக்கும் ஹீரோ. அவரது பேச்சின்போது நாங்கள் அனைவரும் ஏதோ மந்திரத்துக்கு கட்டுப்பட்டது போல அமர்ந்திருந்தோம். நிக்கி சௌ ஒரு எத்திக்கல் ஹாக்கர் (Hacker). அதாவது மின்னஞ்சல்களை உடைப்பது, பாஸ்வேர்ட் திருடுவது, எங்கெல்லாம் பாதுகாப்பு சரியில்லையோ அதை கண்டுபிடிப்பது, பின்பு அந்த பாதுகாப்பு குறைபாடுகளை அறிக்கை தயார் செய்து மென்பொருள் தயாரிக்கும் நிறுவனங்களிடம் கொடுப்பது. மென்பொருள் நிறுவனங்கள் உடனே தங்களிடம் இருக்கும் ஓட்டை, உடைசல்களை சரிசெய்து கொள்வார்கள். நிழல் உலக தாதாக்கள் போல இருக்கும் இவர்களைப் போன்ற ஆட்களை பெரும்பாலும் நிறுவனங்கள் வெளியில் சொல்லாது. காரணம் அவர்கள் பாதுகாப்பின் குறைபாடுகள் வெளியில் தெரிந்துவிடும். போட்டி நிறுவனங்கள் இது போன்ற ஆட்களை பணத்தை காட்டி வாங்கி விடுவார்கள்.

3 Iron. கொரிய மொழியில் வெளியான ஒரு திரைப்படம் நீங்கள் பார்த்திருக்கலாம். கிம்கிடக் இயக்கியது. அதில் வரும் கதாநாயகன் பூட்டிய வீடுகளாக பார்த்து அங்கு செல் வான். பூட்டை உடைப்பான். வீட்டின் உரிமையாளர் அநேகமாக வெளியூர் சென்றிருப்பார். இவன வீட்டுக்குள் செல்வான். உரிமையாளர் வரும்வரை அந்த வீடு இவனுடையது. அந்த வீட்டினுள் சமைத்து சாப்பிடுவான். டிவி பார்ப்பான். தூங்குவான். துணி துவைப்பான். வீட்டை பெருக்குவான். பழுதான பொருட்களை சரி செய்வான். அந்த வீட்டின் உரிமையாளர் வருவதற்குள் வீட்டை விட்டு வெளியே சென்று விடுவான். ஆனால் ஒரு பொருளைக் கூட திருடிக்கொண்டு செல்லமாட்டான். வீட்டின் உரிமையாளர் அங்கு வந்து பார்க்கும்போது அப்படி ஒரு ஆள் அங்கு வந்து போனதற்கான அடையாளம் கூட இருக்காது.

நிக்கி சௌவின் நண்பர்கள் அந்த படத்தின் கதாநாயகனுக்கு பூட்டுத்திருடன் என்று செல்லமாக பெயர் வைத்து அழைப்பார்களாம். அதே பெயரையே நிக்கி சௌவுக்கும் வைத்து விட்டார்கள். அது போன்றுதான் இந்த எதிக்கல் ஹாக்கர் என்று அழைக்கப்படுபவர்கள். நிக்கி சௌ உலகின் Top Ten ஹாக்கர்களில் ஒருத்தன். எந்த நிறுவனம் பணம் தருகின்றதோ அந்த நிறுவனத்தின் மின்னஞ்சல் சேர்வர்களின், இணையத் தளங்களின் பாதுகாப்பு அம்சங்களை சரிபார்த்து வேறு யாரும் இரகசியங்களை திருடாமல் பாதுகாப்பு அம்சங்களை பலப்படுத்தி தருவது அவன் வேலை.

மாநாடு முடிந்த மறுநாள் தனியே நாங்கள் சந்தித்தபோது நிறைய பேசினோம். அவருடன் உரையாடியதிலிருந்து அவர் கிழக்கு சைனாவில் ஏதோவொரு குக்கிராமத்தில் பிறந்தவர் என்றும் ஹொங்கொங்கில் கணிப்பொறிப்படிப்பை முடித்தவர் என்றும் இரண்டு ஆண்டுகள் முன்பு அவர் காதலி அவரை விவாகரத்து செய்துவிட்டுப் போய்விட்டார் என்பது வரைக்கும் தெரிந்தது. நிக்கி சௌவுக்கு சின்ன வயதிலிருந்தே புதிர்களை விடுவிப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்ததாம். பள்ளிக்கூடங்களில் நடந்த பல புதிர் அவிழ்ப்பு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசும் வாங்கியுள்ளாராம். கல்லூரி செஸ் விளையாட்டில் சம்பியனாம். மனித மனம் அதன் விநோதம் பற்றி அறிந்துகொள்ளும் உளமருத்துவராக வரவேண்டுமென்பது அவரது கனவாக இருந்துள்ளது. ஆனால் தவறிப்போய் எப்படியோ கணிப்பொறித் துறைக்கு வந்துவிட்டதாக சொன்னார். ஆனாலும் இந்த ஹாக்கர் வேலையை நான் மிகவும் நேசிக்கின்றேன். கிட்டத்தட்ட இதுவும் ஒரு உளமருத்துவர் வேலை போன்றதுதான் என்றார்.

நான் ஆச்சர்யமாக அவரைப் பார்த்தேன்.

"முதலில் விளையாட்டாக அடுத்தவர்களது மின்னஞ்சல் பாஸ்வேர்டை திருடுவதில் ஆரம்பித்தேன். பிறகு ஒருகட்டத்தில் அதில் நிபுணத்துவம் வந்து விடடது. என்னால் சொடக்கு போடும் நேரத்தில் ஒரு மின்னஞ்சலை திருடி அவர்களது இரகசியங்களை பார்க்க முடியும். இதுவரை ஒரு இலட்சம் மின்னஞ்சல்களை உடைத்திருப்பேன் என்றார். எத்தனையோ பாதுகாப்பு பூட்டுகள் மிகுந்த இணையத்தளங்களை ஒரு நிமிடத்தில் உடைத்துள்ளேன்" என்றார்.

"ஆனால் ஒருமுறைகூட நான் மற்றவர்களது இரகசியங்களை வெளிப்படுத்தியதில்லை. எதிக்கல் ஹாக்கர் இல்லையா?" என்று சொல்லி சிரித்தார்.

"இது வரை எது மாதிரியான தளங்களை உடைதுள்ளீர்கள்?" என்றேன்.

ஒரு பிரபல வங்கியின் பெயரை சொன்னார். பிறகு ஒரு இராணுவ வெப்சைட்டின் பெயரை சொன்னார். ஒரு மருத்துவமனையின் பெயரை குறிப்பிட்டார். ஒரு புகழ்பெற்ற பன்னாட்டு நிறுவனத்தின் பெயரை சொன்னார். அவர் அடுக்கிக் கொண்டேபோக எனக்கு பிரமிப்பாக இருந்தது.

"தனிநபர்களது மின்னஞ்சல்களை உடைத்து பார்த்ததுண்டா?" என்று கேட்டேன்.

"நிறையவே. தனிநபர்கள் மின்னஞ்சல்களில் பெரும்பாலும் செக்ஸ் ஸ்காண்டல் வீடியோக்கள், பெண்கள் அவர்களது காதலர்களோடு எடுத்துக் கொண்ட புகைப்படங்கள், வங்கி நிதிநிலை அறிக்கைகள் என்று எதெல்லாம் அவர்கள் இரகசியமென்று நினைக்கின்றார்களோ அதெல்லாம் பார்த்துள்ளேன். பொது வாழ்க்கையில் உத்தமர்களாகவும், புனிதர்களாகவும் தங்களை காட்டிக்கொள்ளும் எத்தனையோ தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், மத குருமார்கள் எல்லோருமே தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் எவ்வளவு அழுக்குடன் நிர்வாணமாக நிற்கின்றார்கள் என்று தெரிந்துகொள்ள அவர்களது மின்னஞ்சலை உடைத்தால் போதும். உலகப்புகழ்பெற்ற ஒரு பிரபல மதகுருவின் மின்னஞ்சலை உடைத்துள்ளேன். அவர் அந்த மடத்தில் இருக்கும் பெண் சீடர ஒருத்திக்கு காமரசம் சொட்டசொட்ட அனுப்பிய கடிதத்தை படித்துள்ளேன். ஒரு அரசியல் தலைவரின் மின்னஞ்சலை உடைத்துள்ளேன். அவருக்கு க்யூபாவில் எத்தனை வங்கிகளில் கணக்கு உள்ளது என்ற விபரம் தெரிந்தது. இவ்வளவு ஏன் இந்த வருடம் அமைதிக்கான நோபல் பரிசு பரிந்துரை செயயப்பட்ட ஒரு அரசியல் தலைவரின் மின்னஞ்சலை உடைத்துள்ளேன். அவர் தனது சொந்த நாட்டில் எப்படி இனக்கலவரத்தை தூண்டி விடுகின்றார் என்று தெரிந்தது. நான் தெரிந்துகொண்ட இரகசியங்களை வைத்து ஒருபோதும் நான் பிளாக் மெயிலோ பணம் பறித்ததோ இல்லை. எனது தொழில் மனிதர்களை பார்த்து "ஏ அற்ப மனிதர்களே. இந்த உலகத்தில் இரகசியம் என்று எதுவும் இல்லை. நீங்கள் இந்த உலகத்தில் இரகசியமாக செய்யும் எந்த ஒரு விஷயத்தையும் யாரோ ஒருத்தர் கவனித்துக் கொண்டேதான் இருக்கின்றார். எனவே இரகசியங்களை பாதுகாக்கவும் என்று அவர்களுக்கு வலியுறுத்துவதுதான்" என்றார். எனது தேநீர் கோப்பையில் தேநீரை நிரப்பியபடியே சொன்னார்.

"உன்னிடம் இரண்டு தேர்வுகள் இருக்கின்றன. முதல் தேர்வில் ஒரு திறந்து கிடக்கும் அறை முழுவதும் தங்கம் இருக்கின்றது. அடுத்து பூட்டிய அறையொன்றில் என்ன இருக்கின்றது யாருக்கும் தெரியாது. நீ எதை தேர்வு செய்வாய்? எனது பதிலுக்கு காத்திராமல் அவரே சொன்னார். நான் பூட்டிய அறைகளையே தேர்வுசெய்வேன். காரணம் நான் பூட்டுகளைத் திருடவே விரும்புகின்றேன். எனக்கு தேவை மனிதர்களின் இரகசியங்கள் அல்ல. நான் அதை விரும்புபவனும் இல்லை. எனக்கு தேவை பூட்டுகள்தான். பூட்டுகளின் மீதான வேட்கையே என்னை அதை திறந்து பார்க்க வைக்கின்றது."

தேநீர் குடித்தபடியே, "Fake ஐடிகளிலிருந்து வருமநபர்களை உங்களால் கண்டுபிடித்து அவர்களது இரகசியங்களை எடுக்க முடியுமா?" என்றேன். கேட்ட பிறகுதான் அப்படி ஒரு கேள்வியை கேட்டே இருககக்கூடாதோ என்று தோன்றியது.

"நானே எனது ஹாக்கிங் ஆய்விற்காக நூற்றுக் கணக்கான Fake ஐடிக்களை உருவாக்கி வைத்துள்ளேன்" என்றார்.

"இணையம் என்று வந்த பிறகு ஒரிஜினல் என்ன போலி என்ன. எல்லாவற்றையும் உடைத்துப் பார்க்க முடியும். எத்தனையோ அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மின்னஞ்சல்கள் வைத்துக கொண்டு தங்களுக்கு தாங்களே பாராட்டி எழுதிக் கொள்வதை நான் கண்டுபிடித்துள்ளேன். ஒரேநபர் ஆண் பெயரிலும், பெண் பெயரிலும் வந்து தனக்கு தானே மின்னஞ்சல் அனுப்பிக்கொள்வதையும் பார்த்துள்ளேன். அவர்களது பைத்தியக்காரத்தனத்தை நினைத்து சிரித்துக்கொள்வேன். நீங்கள் இணையத்தில் செய்யும் எல்லாச் செயல்களையும் யாரோ ஒருவர் கவனித்துக்கொண்டுதான் இருக்கின்றார். ஒரு வேளை அவருக்கு உங்கள் தகவல்கள் தேவைப்பட்டிருக்காது. அதனால் உங்களை தொந்தரவு செயயாமல் இருக்கலாம். மற்றபடி இரகசியம் என்று எதுவும் இங்கு இல்லை" என்றார்.

சற்று நேரம் இருவரும் எதுவும் பேசாமல் எங்கள் சிகரெட்களை மௌனமாக புகைத்து கொண்டிருந்தோம்.

"மனிதர்கள் விசித்திரமானவர்கள். கேவலம் ஒரு அஃறிணை பொருளை நம்பி தங்கள் இரகசியங்களை ஒப்படைக்கின்றார்கள். ஆனால் சக மனிதர்களோடு உரையாட சிநேகம் கொள்ள நட்பு பாராட்ட தயங்குகின்றார்கள். சதா சர்வ காலமும் இணைய பிம்பங்களில் மூழ்கி திளைக்கின்றார்கள். எப்படி நார்சிஸஸ அர்சன் தண்ணீரில் விழுந்த தன் பிம்பத்தை பார்த்து தன்னைத்தானே காதலித்து கடைசியில் இறந்து போனானோ அது போல ஒரு நாள் இந்த மனிதர்களும் மடிந்து போவார்கள் பாருங்கள்" என்றார்.

விடைபெறும்போது அவரிடம், "இணையத்தில் உங்களால் உடைக்க முடியாத பூட்டே இல்லையா?" சிரித்தபடியே கேட்டேன். "இந்த உலகத்தில் இரகசியம் என்றும் எதுவுமில்லை. எல்லா இரகசியங்களும் ஒருநாள் வெளிபட்டே தீரும். என்னால் இன்னமும திறக்கமுடியாத பூட்டு ஏதாவது இருக்குமென்றால் அது மனிதர்களின் இதயம்தான். ஒவ்வொரு இதயத்திற்குள்ளும் ஆயிரம் ஆயிரம் இரகசியங்கள் ஒளிஞ்சிருக்கு. என்னால் ஒரு போதும் நிஜ வாழ்க்கையில் வாழும் மனிதர்களின் இதய பூட்டை திறக்க முடியுமென்று தோன்றவில்லை."

> "நிக்கி சௌ (Niki Chow) ஐந்தரை அடி உயரத்தில் சின்ன கண்களுடன் ஆனால் முதல் பார்வையிலேயே மனிதர்களை கவர்ந்து இழுக்கும்படியான சிரிப்புடன் வசீகரமாக இருந்தார். தனது சொந்தக் கிராமத்தில் நண்பர்கள் தன்னை பூட்டுத்திருடன் என்று பட்டப்பெயர் வைத்து அழைப்பார்கள் என்று உடைந்த ஆங்கிலத்தில் சொல்லி சிரித்தார்."

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தி உடனடி நிவாரணம்



(கிளிநொச்சி)

யுத்தத்தின் பாதிப்புக்களைச் சுமந்த மக்களுக்கு அபிவிருத்தியே உடனடி நிவாரணமாகும் மக்களும் அதனையே விரும்புகின்றனர் எனவே பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் அறிந்து பூர்த்தி செய்கின்றவர்களே மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக இருக்க முடியும் என ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி ஜெயபுரம், மற்றும் கரியாலை நாகபடுவான் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜெயபுரத்தில், பல்லவராயன் கட்டு கிராமங்களுக்கு மின்சாரம் மற்றும் வீதி புனரமைப்பு, வீட்டுத்திட்டம், வேலைவாய்ப்பு ஆகிய தேவைகள் உள்ளன இதில் உள்ளக வீதிகள் பல புனரமைக்கப்பட்டுள்ளன, இன்னும் பல வீதிகள் புனரமைக்கப்பட வுள்ளது அவையும் மிக விரைவில் சீர்செய்யப்படும், அததோடு மின்சார உயரழுத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது இனி மக்களுக்கு வழங்குவதற்கான மின் விநியோக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் இதேபோன்று மக்களின் ஏனைய தேவைகள் தொடர்பிலும் நாம் படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சொர்க்கநாதன், கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் விகிர்தன், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் நிலைய ஆணையாளர் தயாரூபன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் கிராம அலுவலர்கள் பிரதேச மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவினர் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு




தெற்காசிய நாடுகளிடையே உறவுகளைப் பேணும் ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவினர் அண்மையில் கொழும்பிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடினர்.

ஜீம் லம்பேர்ட் தலைமையினாலான குழுவினர் ஆளுநரை சந்தித்து வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி மற்றும் வாழ்வதார திட்டங்களின் நடைமுறை பற்றி விரிவாக கேட்டறிந்து கொண்டனர். இதற்கான விளக்கத்தை ஆளுநர் வழங்கினார். மேலும் 2009 ஆண்டு போர் முடிவுற்ற பின்னர் அரசினால் வட மாகாணத்தில் மேற்கொள்ளப் பட்டு வரும் நல்லிணக்க செயற் பாடுகள் பற்றியும் ஆளுநர் குழுவினரிடம் விளக்கமளித்தார்.

# மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய வருடாந்த பெருநாள் விழா

(முழங்காவில்)

பூநகரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற மண்ணித்தலை செபஸ்தியார் ஆலய பெருநாள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகி 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இறுதிநாளான 24 ஆம் திகதி திருச்சொரூப பவனி நற்கருணை வழிபாடும் இடம்பெற வுள்ளது. சென்ற ஆண்டு 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இப்பெருநாள் நிகழ்வில் இவ்வாண்டு 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் முகமாக ஏற்பாட்டுக் குழுக்கூட்டம் பூநகரிப் பிரதேச செயலர் எ.எஸ்.வசந்தகுமார் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் குடிநீர் வசதி ஏற்படுத்தல் பொதுமக்களின் வசதிகருதி விற்பனை நிலையங்களை அமைத்தல், சுகாதாரவசதிகளை ஏற்படுத்தல், பாதுகாப்பு ஒழுங்குகள் சம்பந்தமாக ஆராயப்பட்டன.

இவ் ஒழுங்கமைப்பு கூடடத்தில் பங்குத்தந்தை பி.பிராயன் பிரதேச சபை செயலர், சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள், சுகாதாரபரிசோதகர் உளநல வைத்திய அதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் ஆகியோர் உட்படபலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு துறைசார்ந்த பொறுப்புக்களையும் அந்தத்துறையைச் சார்ந்தவர்கள் தாம் மேற்கொள்வதாகத் தெரிவித்தனர். (112)

# ஓவியப்போட்டி

(அச்சுவேலி)

தேசிய தொழிற்சங்க மத்திய நிலைய இலக்கிய இளைஞர் குழுவின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் உழைக்கும் மக்கள் கலைவிழா 2013 இற்குரிய "வியர்வை ஓவிய போட்டி"க்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்வியர்வை ஓவியம் எனும் தலைப்பிலான ஓவியப் போட்டிக்கு ஆக்கங்கள் அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தலைவர், தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம், 12/1, வீரமாவத்தை, சுபூதிபுர, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (85)

# ஆயுர்வேதம்



## தலைக்கொதிப்பு, படபடப்பு!

பித்த தோஷத்தின் ஊடுருவும் தன்மை மற்றும் சூடு என்னும் இரு வகையான குணங்களின் ஆதிக்கம் பொதுவாகவே காய்ச்சலில் கூடிவிடும். தம் சொந்த இருப்பிடம் விட்டு, மூளைப் பகுதிக்கு வந்து ஆதிக்கம் செலுத்தினால், தலைப்பகுதி கொதிக்கத் தொடங்கிவிடும். அவற்றை அமைதிப்படுத்தி, அங்கிருந்து அகற்றக் கூடிய உணவு – மருந்து – செயல் ஆகியவற்றைக் கவனமாக மேற்கொள்ளாமல், உதாசீனப்படுத்தினால், மூளையிலுள்ள நரம்பு மண்டலங்களின் வழியாக, உடல் பகுதிகளிலெல்லாம் சூடு பரவிவிடும். பரபரப்பும், நிதானமின்மையும், படபடப்பும், கவனமின்மையும் இதனால் ஏற்படக் கூடும். எந்தவிதமான ஆய்வு கூடப் பரிசோதனையாலும் இவை புலப்படாது. குணங்களின் செயற்பாடுகளை அவற்றின் செயல் மூலமாக மட்டுமே அறிய முடியுமே தவிர, உடலை எத்தனை கூறு போட்டு ஆராய்ந்தாலும், அவை தென்படாது என்பது கற்றறிந்த வல்லுநர்களின் கூற்றாகும்.

காய்ச்சல் விட்டுவிட்டாலும், உணவில் புளி, உப்பு, காரம் ஆகியவற்றை அதிகம் சேர்த்தாலே, பிறர் மீது கோபம், வெறுப்பு கொண்டு கடும வார்த்தைகளைப் பிரயோகம் செய்தாலோ, நரம்பில் குடி கொண்டுள்ள இந்த இரு குணங்களும் மேலும் மேலும் வலுப்பெற்று உடலைப் படாத பாடு படுத்தும். அவற்றை அங்கிருந்து பிரித்து, குடல் வழியாக வெளியேற்றும் சிகிச்சை முறைகளும் கடுமையாகக் கையாளப்பட வேண்டிய நிலைக்கு மருத்துவர் தள்ளப்படுவார். ஆகையால் இந்த தலைக்கொதிப்பு, உடல் படபடப்பு உள்ளவர்கள் செய்ய வேண்டிய செயல்கள், உண்ண வேண்டிய உணவு, சாப்பிட வேண்டிய மருந்து ஆகியவற்றைக் கீழ் காணும் வகையில் அமைத்துக் கொள்வது நல்லது.

**செயல்கள்:** லேசாகவும் சுத்தமாகவுமுள்ள ஆடைகளை அணிந்து, உடல் மீது வாசனையுள்ள சந்தனத்தை பன்னீர் விட்டு அரைத்துப் பூசி, முற்றத்திலோ மொட்டை மாடியிலோ போய் இரவின் முதல் யாமத்தின் இறுதிப் பகுதியாகிய 8 மணி முதல் 10 மணி வரை, சந்திரனின் ஒளிக் கதிர்கள் மேல்படும்படி அமர்ந்திருத்தல் நலமாகும். தவிர்க்க வேண்டிய செயல்கள் – எதிர்க்காற்று உடலில் படும்படி நடந்து செல்லுதல், பகலுறக்கம், பனி பொழியும் இடங்களில் நிற்பது, வயிறு நிறையச் சாப்பிடுதல்.

**உணவு:** பச்சரிசி, கோதுமை, பச்சைப் பயறு, சீனி, தேன், புடலை, நெல்லிக்காய், திராட்சை, பழச்சாறுகள், கசப்பும் துவர்ப்பும் புளிப்பும் மிக்க நாரத்தை மாதுளை முதலிய கனிகள், கரும்புச் சாறு, சீனி கலந்த இனிக்கும் கடைந்த மோர் பருகுதல் போன்றவை நல்லது. புலால் உணவு தவிர்க்கவும். தயிர், எண்ணெய்ப் பொருட்கள் சாப்பிட வேண்டும்.

**மருந்து:** வாஸூகுடூச்யாதி கஷாயம், திராக்ஷூதி கஷாயம் ஆகியவற்றைக் கலந்து பருகலாம். இவற்றைக் கலந்து சாப்பிட வேண்டிய அளவை ஓர் ஆயுர்வேத மருத்துவரால் மட்டுமே கூற இயலும். காரணம் நோயின் தன்மைக்கேற்ப இவற்றின் அளவைக் கூட்டுவதும் குறைப்பதுமாகச் செய்யவேண்டும்.

த்ரிவிருத்லேஹ்யம், கல்யாண குலம், அவிபத்தி சூரணம் போன்றவற்றிலொன்றை குடல்வாகை அனுசரித்துத் தேர்ந்தெடுத்து, நன்றாக பேதியாகும் வகையில் சாப்பிட்டால், பித்த நீரைக் குடலிலிருந்து வெளியேற்றலாம்.

சந்தனாதி தைலம், ஹிமசாகரதைலம், திரிபலாதி தைலம், அமிருதாதி தைலம் போன்றவற்றிலொன்றை தலைக்குத் தேய்த்துக் குளித்து வருவது நல்லது.

வீட்டில் நிலவும் அமைதியான சூழ்நிலையும், அன்பான பேச்சும், பாதிக்கப்பட்டவரிடம் மற்றவர்கள் காட்டும் கரிசனமும் அவர் விரைவில் குணமாக வழி அமைத்துத் தரும். அவருடைய மனம் மகிழும்படி பார்த்துக் கொண்டாலே, நரம்புகளில் பற்றியுள்ள பித்த குணங்கள் நெகிழ்ந்து வெளியேறி, மூளைப் பகுதியையும் வலுப்படுத்தி, உபாதைகள் குறைந்து விட வாய்ப்பை உருவாக்கித் தரும்.

# நெடுந்தீவில் குடிநீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்



நெடுந்தீவில் குளங்களை புனரமைத்து நிலத்தடி நீரை பாதுகாக்கும் வகையிலான சில உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவில் நேற்று முன்தினம் தினம் இடம்பெற்ற கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நிகழ்வானது நெடுந்தீவு மக்களின் நீண்டகாலக்கனவை பூர்த்தி செய்துள்ளது. இப்பகுதியில் பல்வேறு தேவைகள் இனம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஏனைய தேவைகளும் படிப்படியாக பூர்த்தி செய்யப்படும்.

குறிப்பாக நெடுந்தீவு மக்களின் கடல் மார்க்கமான போக்குவரத்தை சீர்செய்யும் முகமாக வடதாரகை போன்று 40 மில்லியன் ரூபா செலவில் புதியதொரு படகு நிர்மாணிக்கப்பட்டு விரைவில் சேவைக்கு அமர்த்தப்படுமெனவும் இதேபோன்று வடதாரகை படகிலிருந்து மக்கள் நெடுந்தீவு கரைக்கு வந்தடையும் வகையில் விரைவில் புதிய படகொன்றை கொள்வனவு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.


நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி தலைமையில் நடைபெற்ற கலாசா பெருவிழாவில் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் (ரஜீவ்) வரவேற்புரை நிகழ்த்த அருந்தவசீலன் மற்றும் பிலீக் ஜேக்கப் ஆகியோர் உரைநிகழ்த்தினார்.

இக்கலாசார பெருவிழா நிகழ்வில் நெடுந்தீவில் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக இயல் இசை நாடகம் போன்ற துறைகளுக்காக உழைத்த மூத்த கலைஞர்கள் அமைச்சர் அவர்களினால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு சான்றுப்பத்திரங்களையும், பணப்பரிசில்களையும் வழங்கி கௌரவித்தார்.

இதில் நெடுந்தீவைச் சேர்ந்த இளம் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கலாசார பெருவிழாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக பிரதேச செயலகமும், பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா நெடுந்தீவு பிரதேச செயலர் சிறி, ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஆகியோருடன் சமயத் தலைவர்களும் உடனிருந்தனர்.

# பரமர் சங்கமம்



'நாய் வாலை நிமிர்த்த முடியுமா? 'இந்தக் கேள்வியும், நிலைப்பாடும் காலாதி காலமாக இருந்து கொண்டிருக்கிற விடயமாகும். மனித சமுதாயம் இருக்கின்றவரைக்கும் இப்படி எத்தனையோ விசயங்கள் ஒட்டிக்கொண்டுதான் இருக்கப் போகிறது.

அதில ஒண்டுதான் வீதிப்போக்குவரவுகளை மக்கள் மத்தியில் ஒழுங்குகொண்டு வருகின்ற முயற்சியும் . அரசினால் அதற்கென வகுக்கப்பட்ட போக்குவரவுப் பொலிசாரே திணறுகின்ற அளவுக்கு அது தலையெடுத்துள்ளது. அதிலும் யாழ்ப்பாண வீதிகளை அகலித்து 'காபெற் றோட் பின்பாக சகல வாகன ஒட்டிகளும் வஞ்சகம் இல்லாமல் ஆளுக்கு ஆள் ஒழுங்கு விதிகளை மீறுவதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். பொலிஸார் கடைசியாக ஊடகங்களுக்கும் மக்களுக்கும் போதிய அறிவை வழங்க முன்வர வேண்டும். நீதிமன்றில் வழக்குத் தொடுத்துப் பிரயோசனத்தைக் காணவில்லை' என்று ஊடகங்களின் உதவிகளை நாடியுள்ளனர். இப்பவுமென்ன போக்குவரவு விதிகள் தெரியாமலே நடந்து கொள்கிறார்கள். எல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டு கட்டுடைப்பதுவே இந்தக் கால மனித நாகரீகமாக மாறியள்ளது

கடந்த ஜீலை 10ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் காங்கேசன்துறை வீதியால் நகரை நோக்கி சைக்கிளிலில் வந்து கொண்டிருந்தேன். நாவலர் வீதி (மனோகரா) சந்தித் திருப்பத்தில் என்னை முந்திச் சென்ற சிற்றூர்தி திடிரென நிறுத்தி பிரயாணிகளை இறக்கியது. அதற்கு நேராக வீதி ஒரத்தில் முச்சக்கரவண்டி ஒன்றும் நிறுத்தப்பட்டிருந்தது .

இரண்டுமாக வீதியின் அரைப்பங்குக்கும் மேலாக இடத்தைப் பிடித்து விட்டதால் விலகிச் செல்ல பின்னால் வந்த வாகனங்கள் முடியாமல் வரிசை கட்டி நின்றன. என்னால் தொடர்ந்து சைக்கிளில் பயணிக்க முடியாமல் இறங்கி உருட்டிக்கொண்டு போகையில் நடத்தினரிடம் இப்படி வாகனத்தை நிறுத்தியது சரியா....... 'இதனாலதான விபத்துகள் ஏற்படுகிறது' என்றேன் 'அதுக்கென்ன இப்ப...அப்புடித்தான் நிறுத்துவம்...என்றார். என்னைப் பத்திரிகையாளன் என்று அறிமுகப்படுத்தினேன். 'பத்திரிகைக்காறன் எண்டாப்பயமே... அலகு உடைச்சுப் போடுவன் .....'என்றவன் அடிக்கக் கையையும் ஒங்கினான் இதுதான் எதார்த்தமான நிலைமை. அவனுக்குச் சட்டம் ஒழுங்கு தெரியாமல் இருக்க நியாயம் இல்லை. பத்திரிகையாளன் அல்ல வேறோரு சாதாரணியாகவும் அந்தக் கருத்தைச் சொல்ல முடியும். ஆயினும் ஊடகவியலாளனை அப்படித்தான் பார்ப்பார்கள்.

ஏனெனில் எந்த அதிகார தோறணையும் காட்ட முடியாது. அதேவேளை பொலிஸாரே ஊடகவியலாளரிடம் உதவி கேட்டால் என்ன நடக்கும்? 'நாய் வால் நிமிர்த்துகின்ற காலமொண்டு தோன்றுமாம்." அதற்கு விசர் பிடிச்சால் வால் கீழ்நோக்கி நிமிர்ந்து நிற்பதைப் பாத்திருப்பியள். அப்ப மனிசருக்க சரியான சிந்தனையில் விதியை மீறுகிறதுதான் நோயாக இருக்கும் இல்லையே நான் சொல்லுறே.......

# முருங்கைக்காயின் விலையில் வீழ்ச்சி

(அச்சுவேலி)

குடாநாட்டில் தற்போது முருங்கைக்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக முருங்கை செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதங்களில் முருங்கையானது 400-500 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது 150-200 ரூபா வரையிலே விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் முருங்கை செய்கையாளர்கள் நஷ்டத்தை எதிர் கொண்டுள்ளனர். எனினும் சந்தையில் நூறு ரூபாவிற்கே அவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது .

எனினும் குறித்த நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் முருங்கைக்காயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டமைமையால் கொள்வனவு செய்வோர் மகிழ்ச்சியுடன் வாங்கிச் செல்வதை சந்தைகளில் அவதானிக்க முடிகின்றது. (85)

# மரபுமுறையில் மீன்பிடிப்போரை கைது செய்ய நடவடிக்கை

தடைசெய்யப்பட்ட மரபு ரீதியான முறைமைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட மரபு ரீதியான மீன்பிடி முறைமைகளை கையாள வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் பெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், சிலாபம் உள்ளிட்ட பகுதிகளில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகள் பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். லைட்கோஸ்ட் மற்றும் டைனமைட் ஆகிய முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் மீன் வளத்திற்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான சுற்றிவளைப்புக்களின் போது கைப்பற்றப்படும் மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் அரசுடமையாக்கப்படுவதுடன் மீனவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மன்னார்ப் பகுதியில் தடைசெய்யப்பட்ட மரபு முறையிலான மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதான மீனவர்களுக்கு எதிராக ஏற்கனவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்



(24.07.2013 -புதன்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 08 ஆம் திகதி.திருவோணநட்சத்திரம் மு.ப. 06.24 வரை பின்அவிட்டம் ,மரணயோகம்,பின்இரவு 5.17 வரை துதியைத்திதி

இராகுகாலம 12.02- .01.32வரை. சுபநேரம04.32- 06.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகோதர உறவில் திருப்தி,பணவரவு,உத்தியோக உயர்வு,புதிய மனை அமைக்க யோசனை.உறவினர் வருகை. |
| ரிஷபம் | வேலைபெற தொழல் வங்கியில் பதிவு.விவாக முயற்சி வெற்றி, அதிர்ஷ்டலாபச்சீட்டினால் பணவரவு,நோய் அச்சம் மறைதல். |
| மிதுனம் | பயணமுயற்சி வெற்றிவாகை,குழந்தைப் பிரசவம், வாகனயோகம்,வாடகைக்குவீடு,மாமன் உதவி, சுபச்செலவு. |
| கடகம் | தாயாரின் தேகநலம் விருத்தி, பயணம் இடைநடுவில் இறக்கம், கடன்பெற நணபர் உதவி,திகதிதப்பிய பொருள் கிடைத்தல். |
| சிம்மம் | அதிகாரிகள் பாராட்டு,சுவிப் அதிர்ஷ்டம்,பொறுமையால் காரியஜெயம்,தாயகம் வரல்,காதல் உறவு,வரன் தேடி அலைவு. |
| கன்னி | இடமாற்றக் கடிதம்,கடன்பட்டதால் திண்டாட்டம், ஆலய தரிசனம்,மாமன் உறவில் சற்று விரிசல், நாட்டப்பட்ட பகை மறைதல். |
| துலாம் | கடன்பெற வங்கி அனுமதி,சிறுவிபத்தால் உறுப்பு பாதிப்பு,போலி நகையால் ஆபத்தின்மை,வெளியூர் பயணஞ் செல்லும் யோசனை. |
| விருச்சிகம் | மயிரிழையில் அருந்தப்பு,சுபகாரியத்தை ஒத்திவைத்தல், கண் சம்பந்தப்பட்ட நோய் பாதிப்பு,மாமனால் உதவி. வெளியூரினின்றும் உறவினர் வருகை. |
| தனுசு | ஆசை காட்டி ஏமாற்றம்,தாயகம் திரும்பும் உத்தேசம், பெற்றோருடன் முரண்பாடு, காதல் உறவு, அதிகாரிகள் தட்டிக் கொடுத்தல். |
| மகரம் | ஆயுத பாவனையால் காயம்,சம்சாரத்துடன் பிணக்கு,விரிசலடைந்த சிநேகித உறவில் மேன்மை, துணிவினால் காரிய ஜெயம்,நோய் பற்றிய அச்சம் தீரல். |
| கும்பம் | அரசுத்துறையில் பணிக்கு வாய்ப்பு,சுவீப்பில் பணம், இடைத்தங்கல் நாட்டை கைவிடல், மனைவியின் தேகநலப்பாதிப்பு. |
| மீனம் | சுபகாரியத்திற்குச் செலவு,வேலையாட்களால் திருட்டு,தொலைபேசியில் மிரட்டல், கடனுக்காக வங்கிக்கு விண்ணப்பம்,ஆவணமின்மை தண்டத்தை தரல் |

6) 2250ml தேங்காய் எண்ணெய்யை 450ml கொண்ட சிறிய குப்பிகளில் ஊற்றப்பட்டது. எனின் அதற்குத் தேவைப்பட்ட குப்பிகள் எத்தனை? ..............................

7) மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமான தையல் பயிற்சி வகுப்பானது மு.ப. 11.45 மணிக்கு முடிவுற்றது எனின் தையல் பயிற்சி வகுப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு?

..............................

8) இடைவெளி நிரப்புக.

38403 = 30,000 + 8000 + ................+0+3

9) ரூபா 225.00 இற்கு ரம்புட்டான் பழமும் , ரூபா 305.00 இற்கு வாழைப்பழமும் வாங்கி ரூபா 1000.00 தாள்காசை கொடுக்கும் போது கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

..............................

10) குடும்பம் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை சமைக்க 2kg 250g அரிசிதேவையாகும். 9kg அரிசி அக்குடும்பத்திற்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானதாகும்?

..............................

11) இங்கிலாந்தில் நண்பகல் 12.00 மணி ஆக இருக்கும் போது இலங்கையில் நேரம் பி.ப. 6.00 ஆகும். இங்கிலாந்தில் மு.ப. 10.15 இற்கு ஆரம்பமாகும் கிரிக்கட்போட்டி ஒன்றின் நேரடி ஒளிபரப்பை இலங்கையில் எத்தனை மணிக்குப் பார்க்கலாம்?

..............................

12) மாத்தறையிலிருந்து காலி ஊடாக கொழும்புக்கு உள்ள தூரம் யாது?

..............................

| | | | கண்டி |
|---|---|---|---|
| கொழும்பு | | | 116km |
| காலி | | 116km | 232km |
| மாத்தறை | 45km | ....?.... | ....?.... |

13) மாத்தறையில் இருந்து கொழும்பு ஊடாக கண்டிக்குள்ள தூரம் யாது? ..................

**(14) நானும் எனது நண்பர்களும் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மைதானத்தில் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தோம். திடீரென எனது நண்பர்களில் ஒருவனான நேசன் விழுந்துவிட்டான் எல்லோரும் அவனை சூந்துக்கொண்டோம்.... இதனை தொடர்ந்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருக்க வேண்டும். இலக்கணரீதியான தொடர்புசரியாக இருக்க வேண்டும்.**

01. ..............................

02. ..............................

03. ..............................

04. ..............................

05. ..............................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

1.30 மணி



**(1) பின்வரும் பந்தியை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

தொடர்ச்சியான மழையின் காரணமாக மக்கள் படாதபாடுபட்டுக் கொண்டிருந்தனர். பள்ளிக்குச் செல்வதென்றாலும், உடுதுணிகள் காயவைப்பதென்றாலும் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர். வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது உடமைகளை இழந்து தரையில் வந்து தவிக்கும் மீன்கள் போல மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு அலைந்து திரிகின்றனர். நல்லதோர் விடியலுக்காக வானை அண்ணார்ந்து பார்க்கின்றனர். வானம் சிரிக்கத்தொடங்குகிறது மக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி அங்குமிங்குமாக ஓடி தமது வேலைகளை செய்ய ஆரம்பிக்கின்றனர்.

1. மகிழ்ச்சி என்ற சொல்லுக்கான எதிர்சொல்லைத் தருக? ..............................
2. மக்கள் என்ற சொல்லின் ஒத்தசொல்லை தருக? ..............................
3. பந்தியில் இடம் பெற்றுள்ள உவமைத் தொடரைக் குறிப்பிடுக? ..............................
4. "வானம் சிரிக்கத் தொடங்குகிறது" என்பதால் விளக்கம் பெறுவது என்ன? ..............................
5. பந்தியிலுள்ள இணைமொழி ஒன்றைக் குறிப்பிடுக? ..............................
6. பந்தி குறிப்பிடும் இயற்கையழிவு ஒன்றை குறிப்பிடுக? ..............................
7. 'தமது வேலைகளை செய்ய ஆரம்பிக்கின்றார்கள்' என்பதை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக?

..............................

8. பந்தியில் இடம் பெற்றுள்ள வினை அடைமொழியைக் குறிப்பிடுக? ..............................

**(2) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.**

1. உலகில் / இன்றைய / சமைத்துச் / உணவு / நேரமில்லை / சாப்பிடுவதற்கு

..............................

2. தங்குவதற்கு / இடம் / வைத்தியர் / கொடுக்கப்பட்டது / ஒதுக்கிக்

..............................

**(3) இடைவெளி நிரப்புக.**

1. மயிலுக்கு குழாம் என்பது போல பசுவிற்கு ..............................
2. கிளிகள் கீச்சிட்டன என்பது போல ஆந்தைகள் ..............................

**(4) பின்வரும் பழமொழிகளின் கருத்தைக் குறிப்பிடுக.**

1. பட்ட காலிலே படும் ..............................
2. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி ..............................

1. இன்றைய மாணவர்கள் கல்வி கற்பது **நுனிப்புல் மேய்தல்** போன்ற செயலாகும். ..........................

2. எனது முன்னேற்றத்தைக்கண்டு **வயிற்றெரிச்சல்** படுவதுண்டு. ..........................

**(6) பின்வரும் வாக்கியத்துக்கு பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. மெய் வாய் கண் மூக்கு செவி என்ப் ஐம்பொறிகளாகும்
2. நலமுடன் வாழ்க


**(7) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. பிரி சுது வதுர .......................... 2. கபுடா பியாம்பை ..........................

**(8) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. pure water .......................... 2. today is holiday ..........................

**(9) பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.**




.......................... ..........................

**(10) பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

1. சுதந்திரதியானம், சுதந்திரமந்திரம், தேசிய தாலாட்டு - ..........................
2. மலையகமும் காரியமும், சிலோன் நெஷனல் ரிவீவ் - ..........................
3. சிங்கள அகராதியாக்கம், நையாண்டிக்கதைகள் - ..........................
4. வயலர்ஸ் வேல்ட் சஞ்சிகையின் கட்டுரை - ..........................

**(11) பின்வரும் எழுத்துக்கள் குறிக்கும் கோள்களின் பெயர்களை குறிப்பிடுக.**




A ..........................
B ..........................
C ..........................
D ..........................
E ..........................

**(12) சரியான விடையின் கீழ் கோடிடுக.**


1. வீட்டில் பலாக் கொட்டைகளை நீண்ட காலம் பாதுகாக்கக்கூடியய முறைகளில் ஒன்று.
   1. காயவைத்தல் 2. தகரத்தில் அடைத்தல் 3. அவித்தல் 4. உப்பிடல்

2. நீரில் கரையாத பொருள்.
   1. உப்பு 2. சீனி 3. குளோரின் 4. பலாக்காய்ப்பால்

3. நீரை உறிஞ்சிக் கொள்ளாத பொருள்
   1. சுண்ணாம்பு 2. செங்கல் 3. சாக்கு 4. கருங்கல்



04. சப்ரகமுவ மாகாணத்தில் அமையப்பெற்றுள்ள மாவட்டங்கள்.
   1. இரத்தினபுரி - பதுளை 2. கொழும்பு - கேகாலை
   3. பதுளை - பண்டாரவளை 4. இரத்தினபுரி - கேகாலை

05. 



அருகில் காட்டப்பட்டுள்ள கண்ணாடி குவளையில் மஞ்சள் நீர் ஊற்றப்பட்டுள்ளது. அதில் சவர்க்கார நீரை ஊற்றும் போது ஏற்படும் மாற்றம்.
   1. நீர் வெள்ளை நிறமாகும். 2. நீர் சிவப்பு நிறமாகும்
   3. நீர் ஊதா நிறமாகும் 4. எவ்வித மாற்றமும் ஏற்படாது.

06. தாவரங்களில் இரவைக் கழிக்கும் பிராணிகள்.
   1. ஓணான் - தேவாங்கு 2. ஆந்தை - தேவாங்கு
   3. ஓணான் - வெட்டுக்கிளி 4. மரங்கொத்தி - ஆட்காட்டி

07. கிழங்குத் துண்டுகளை நடுவதன் மூலம் வளரக்கூடியது.
   1. வள்ளிக்கிழங்கு 2. வற்றாளைக்கிழங்கு 3. மரவள்ளிக்கிழங்கு 4. கரட்கிழங்கு

08. விற்றமின் B அதிகமுள்ள உணவுகள்.
   1. தவிட்டரிசி - முட்டை 2. தவிட்டரிசி - கடும்பச்சை நிறகாய்கறி
   3. கடும்பச்சை நிறக்காய்கறியும் - மஞ்சள் நிற பழங்களும் 4. முட்டை - மீன்

09. உலர் மின் கலங்கள் (C) இரண்டும், மின்குமிழ் (B) ஒன்றும் வயர் துண்டுகள் மூன்றும் கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழைக் கொண்ட உரு எது?





10. பின்வருவனவற்றுள் இலங்கை ருபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குரிய சின்னம் எது?

1. 2. 3. 4.

(15 புள்ளிகள்)


**(13) கணித வினாக்களுக்கு விடை தருக.**

1) 


உருவின் சுற்றளவை மீற்றரில் தருக? ....................

2) கழிக்குக. $\frac{6}{8} - \frac{2}{4} = \square$

3) அருகில் தரப்பட்டுள்ள இச்சதுரமுகியின் மேல் இது போன்ற இன்னுமொரு சதுரமுகியை இணைப்பதன் மூலம் தோன்றும் திண்ம உரு எதுவாகும்?




4) 500g பயறு 1kg 500g கடலை வாங்குவதற்கு தேவையான பணம் ரூபா 250.00 ஆகும். எனின் 250g பயறு 750g கடலை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? ..........................






யாழ்ப்பாணத்தில் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வங்கிகளால் வீதிக் குறியீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் போக்குவரத்து செய்வோர் இலகுவாகப் பயணம் மேற்கொள்ள உதவுகிறது.

ஆயினும் சில இடங்களில் அந்தக் குறியீடுகளை வேலிகளின மரங்கள் வளர்ந்து மறைத்து வருகின்றன. (21)

# ஆளுமைமிக்க பிரஜைகளை பாடசாலை உருவாக்க வேண்டும்

## வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்

(பருத்தித்துறை)

இன்றைய மாணவர்களே எதிர்காலத்தில் இந் நாட்டை ஆளப்போகின்றார தலைவர்கள் இவர்கள் ஒழுக்கம் நிறைந்த ஆளுமை மிக்க பிரஜைகளாக உருவாக்க வேண்டும். இவர்கள கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்காடுகளிலும் முன்னணியில் திகழ்ந்து சாதனை புரிய வேண்டும். ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு துறையில் முன்னணியில் திகழ்ந்து பெருமையடைந்து வருவது பாராட்டுக் குரியதாகும்.

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியைச் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைத்து உரையாற்றிய வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா குறிப்பிட்டார்.

நிகழ்வில் கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்றது.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் பல்வேறு உலகநாடுகளிலும் சிறப்புடன் வாழ்ந்து கல்லூரியின் பெருமைகளை பறைசாற்றி வருகின்றனர். அத்தோடு தாம் கல்வி கற்ற கல்லூரியின் மேம்பாட்டிற்கு சிறந்த உதவி செய்து வருவது மகிழ்ச்சிக் குரியதாகும்.

175 வருடங்களாக ஹாட்லிக் கல்லூரியின் இலங்கையின் கல்விப் புலத்தில் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. இக் கல்லூரி சாதனையைத் தொடர்ந்து நிகழ்த்துவதற்கு இன்றைய அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முதன் முதலில் 1936 ஆம் ஆண்டு இக் கல்லூரியிலிருந்து புலமைப் பரிசில் பெற்று பல்கலைக்கழகம் சென்றுள்ள மாணவர் ஒருவர் தொடர்ந்தும் மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர்.

முன்னை நாள் யாழ். பல்கலைக் கழகத்து துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானத்துறையில் சாதனை சாதனைகளை நிலைநாட்டியிருந்தமையும் மறக்கப்படக் கூடாது இக் கல்லூரியின் அதிபர் ஆசிரியர்களை வழங்கி வரும் அர்ப்பணிப்பான சேவை சேவைகளே இவ்வாறான சாதனைகளுக்கு வழிவகுத்து வருகின்றன.

கல்லூரிச் சமூகம் கல்லூரி அபிவிருத்திக்கு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் வழங்கி வரும் பங்களிப்புக்களை பாராட்டுக்குரியன.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்களும் இன்றைய மாணவர்களுக்கும் எங்கும் நன்மதிப்புக்கள் இருக்கின்றன. இக்கல்லூரியின் சாதனைகள், பெருமைகள் தொடர்ந்தும் நிகழ்த்தப்படுவற்குஇன்றைய மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களும் மழு முயற்சியுடன் செயற்பட வேண்டும்.

இங்கு இடம்பெற்ற மாணவர்களுக்கான கல்லூரி கண்காட்சியை கல்லூரி மாணவர்களும் ஏனைய பாடசாலை கல்வியின் மாணவர்களும் பார்வையிட்டுப் பயன்பெற்றனர். (01)

# மொத்த வியாபாரிகள் இறுக்கம் சில்லறை வியாபாரிகள் பாதிப்பு

(வரணி)

யாழ்.குடாநாட்டில் முன்பு தவணை அடிப்படையில் வங்கிக் காசோலைகளுக்கும் பொருட்களை இறக்கிவந்த பெரும் வர்த்தகர்கள் தற்போது அப்படியான நிலையை நிறுத்தியுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மை காலமாக குடாநாட்டில் இலட்சக்கணக்கான ரூபாய்களுக்கு சொந்தமான வர்த்த கர்கள் மற்றும் சீட்டுப்பிடிப்போர் இந்த இடமே இல்லாது தலைமறைவான நிலையில் பெரும் வர்த்தகர்கள் தமது பொருட்களுக்குரிய பணத்தை உடனடியாக பெறுக்கொள்ளும் அதே வேளை பழைய நிலுவைப் பணத்தை வசூலித்து வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்படியான சூழலில் கடனடிப படையில் பொருட்களை எடுத்து விற்று பணத்தை செலுத்தி வந்த வர்த்தகர்கள் பெரும் இக்கட்டான ஒரு சூழலில் வியாபாரத்தை செய்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

(150)

# புனரமைப்பு பூர்த்தி



(அச்சுவேலி)

யாழ்ப்பாணம்-நல்லூர் முன் வீதியில் கடந்த பல நாட்களாக நடைபெற்று வந்த பாலப்புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளமையால் போக்குவரத்தில் ஈடுபடுவோரின் சிக்கல் நிலை நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல நாட்களுக்கு மேலாக இந்தப் பால வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடையமையால் போக்குவரத்துச் செய்வதில் தனியார் பஸ்களும் இ.போ.ச. பஸ்களும் மற்றும் வேறு வாகனங்களும் செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

எனினும் தற்போது பால வேலை முற்றாக நிறைவடைந்தமையால் இத்தகைய சிக்கல் நிலை நீங்கியுள்ளதாக போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர். (85)

# நவாலியில் விவசாயச் செய்கை

நவாலியில் வயல்வெளிப்பகுதியில் மக்கள் விவசாயப் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

எள்ளுப் பயிர்கள் தற்போது அறுவடையை எட்டியுள்ளன. இதேவேளை கத்தரி, பூசணி, தக்காளி உட்பட்ட மரக்கறி செய்கையிலும், வெங்காயச் செய்கையிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

பளை புதுக்காட்டுப் பகுதியில் ஏ-9 வீதியில் பயணிகள் சேவை வண்டி விபத்துக்குள்ளாகி கடந்த திங்கட் கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை மரணமடைந்துள்ளார்

அரியாலையைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளியாகிய ராமையாக கோவிந்த சாமி (வயது-50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை குறித்த நபர் வேலைக்கு செல்வதற்காக கிளிநொச்சி சென்ற தனியார் பஸ் வண்டியில் சென்றிருக்கின்றார்.

முற்பகல் 10 மணிக்குபுதுக்காட்டுச் சந்திப் பகுதியில் இறங்குவதற்கு பஸ் வண்டியின் மேற்பகுதியில் நின்றிருக்கின்றார். அந்நேரம் பஸ்வண்டியின முன்பாக ஹன்ரர் வாகனம் ஒன்று முற்பட்டதனை அடுத்து பஸ் சாரதி சடுதியாக பஸ்ஸை திருப்பியெடுத்த சமயம் அவர் பஸ்ஸிற்கு முன்பாக கம்பியில் அடிபட்டு கீழே விழுந்து குறித்த கன்ரர் வாகனத்திலும் அடிபட்டு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுக்காலை மரணமடைந்ததாக தெரிவிக்கப்படுன்றது.

இந்தச் சம்பவம் குறித்து பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (பா)

# நீர்வேலி கேராளிவத்தை வீதி புனரமைக்கப்படுவது எப்போது?

(நீர்வேலி)

யாழ்ப்பாணம் நீர்வேலியில் உள்ள கோராளிவத்தை வீதி புனரமைக்கப்படாமல் சேதமடைந்துள்ளது.

கடந்த ஆண்டு இந்த வீதி திருத்தப்பட்டு குறையாக விடப்பட்டு அவ் வீதி தொடர்ந்தும் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்த வீதியால் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் மழை காலங்களில் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இந்தப் பாதையைப் பயன்படுத்தும் விவசாயிகள், வியாபாரிகள், மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாக கவலை வெளியிட்டுள்ளனர். பாதசாரிகளோ துவிச்சக்கரவண்டிகளோ பயணம் செய்ய முடியாத அளவில் மிகவும் சேதமடைந்துள்ள இந்த வீதியால் வாகனப் போக்குவரத்து எதுவும் மேற்கொள்ள முடிவதில்லை.

இந்த வீதியை புனரமைக்குமாறு ஏற்கனவே இப்பகுதி மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வீதித்திருத்தம் இடம்பெற்றிருந்தது. அந்தத் திருத்த நடவடிக்கையும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் வீதிப்புனரமைப்பு இடம்பெறாது விடின் மழை காலத்தில் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் மேலும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே இந்த வீதியை புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் கூடுதலாக தலைவிரித்தாடும் நிலையில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வசிக்கும் சமூகசேவை.அக்கறை உடையவர்கள் தமது பிரிவில் நடைபெறும் வேண்டப்படாத செயல்களில் ஈடுபடுவோரை இனங்கண்டு பொலிஸாரிடம முறையிடமுடியும்.

கசிப்பு உற்பத்திவிடுகளில் மதுவிற்பனை, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சட்டவிரோத கருக்கலைப்பு,முதியோரைப் பராமரிக்காமை, பாடசாலை செல்லாது வீடுகளில்,வீதிகளில் சுற்றித்திரிதல், குழந்தைகளுடன் பிச்சை எடுத்தல்,போன்ற பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றால் முறையீடுகளை கிராமசேவை அலுவலகத்திலோ அல்லது அருகில் உள்ள பொலீஸ் நிலையத்திலோ முறையிட்டால் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெறும் முறையிட்டவர்களின் பெயர் விபரம் இரகசியமாக பாதுகாக்கப்படும்.

எனவே சமூகப் பொறுப்புடையவர் இப்படியான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டும்.என அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸ் - மிடில்டன் தம்பதியருக்கு அழகான ஆண் குழந்தை



(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்சின் மனைவி, கேட் மிடில்டனுக்கு நேற்று முன்தினம் அழகான ஆண் குழந்தை பிறந்தது. பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்சின் மனைவி கேட் மிடில்டன், பிரசவத்திற்காக, லண்டனில் உள்ள செயின்ட் மேரீஸ் மருத்துவமனையில், கடந்தவாரம் அனு மதிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து நேற்று முன்தினம் காலை முதலே அவருக்கு பிரசவவலி இருந்து வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 4.24 மணிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்ததாக கென் சிங்டன் மாளிகை பத்திரிகையாளர்களிடம தெரிவித்தது.

இளவரசர் வில்லியம்ஸ் மனைவி கேத் மிடில்டனுக்கு பிறந்த ஆண் குழந்தை மூன்றே முக்கால் எடையுடன் அழகாகப் பிறந்தது. குழந்தை பிறப்பு பற்றிய செய்தி தெரியவந்தவுடன் பிரிட்டன் முழுவதும் உற்சாக கொண்டாட்டத்தில் உள்ளது.


பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸ் மனைவி கேத்மிடில்டனுக்கு ஆண் குழந்தை பிறந்தது குறித்து நாடெங்கிலும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். மன்னர் குடும்பத்திற்கு அடுத்த வாரிசு கிடைத்து விட்டது. எதிர்காலத்தில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் மன்னராக வாய்ப்பு உள்ளது. இளவரசர் சார்லஸ், அவரது மகன் வில்லியம் ஆகியோரைத் தொடர்ந்து மூன்றாவது தலைமுறையாக இப்போது பிறந்துள்ள குழந்தை கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸ் மனைவி கேத்மிடில்டன் தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்ததை அறிந்த அமெரிக்க அதிபர் ஒபாமா - மிச்சலே தம்பதியர் இருவரும் ஆசீர்வதித்து வாழ்த்து தெரிவித்தனர்.

குழந்தை பிறப்பு பற்றிய செய்தி, முதலில், மருத்துவமனை மருத்துவரின் மூலம், ஒரு சீட்டில் எழுதப்பட்டு, அரண்மனை, கார் சாரதியிடம் கொடுகப்படும். அங்கிருந்து அரண்மனைக்கு கொண்டுசெல்லப்பட்டு, அரச குடும்பத்தாரின் ஒப்புதலுக்குப் பின், பொதுமக்களின் பார்வைக்காக, தகவல் பலகையில் ஒட்டப்படும். இந்த முறையான நிகழ்வுகளுக்கு முன்னரே, செய்திகளை ஒளிபரப்பும் ஆர்வத்தில் ஊடகங்கள் செயல்படுவதால், கடிதத்தை தெளிவாக பெரிதாக்கி காட்டும் கமராக்களுடன், பத்திரிகையாளர்கள் வலம் வருகின்றனர். மேலும், வில்லியம்சின் மனைவி, கேட், எந்த நேரத்திலும், குழந்தையுடன் மருத்துவமனையிலிருந்து வெளியே வரலாம் என்பதால், மருத்துவமனையின் அனைத்து வாயில்களிலும், ஊடகங்களின் கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளன. பிரிட்டன் மட்டுமின்றி, சீனா, ஜப்பான், கொரியா, அமெரிக்கா, கனடா, ஆஸ்ரேலியா உள்ளிட்ட, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும், மருத்துவமனை வளாகத்தில் முகாமிட்டு உள்ளனர். கடந்த, 30 ஆண்டுகளுக்கு முன், வில்லியமும், அவரது சகோதரர், ஹாரியும் பிறந்தபோது கூட, இத்தனை ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவில்லை என பிரிட்டன் மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## வயதான முதியவர்

காஷ்மீரில் வசிக்கும், பிரோஜ் -உன்-திர்-மீர், உலகிலேயே மிகவும் வயதான நபராக, 'கின்னஸ்' உலக சாதனை புத்தகத்தில், விரைவில் இடம்பெறவுள்ளார். கடந்த, 1872 மார்ச், 10 ஆம் திகதி பிறந்த, இவரின் தற்போதைய வயது, 141. மிகவும் குறைந்த பார்வைத்திறன் கொண்ட மீர், தன் குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன், தன் வேலைகளை செய்கிறார். தன்னுடைய வாழ்க்கை குறித்து, "காஷ்மீர் லைப்" பத்திரிகையில், அவர் கூறியிருப்பதாவது, நாடு சுதந்திரம் அடையும் முன், கராச்சியில், என் தந்தையுடன் இணைந்து, பழங்கள் மற்றும் அக்ரூட் கொட்டைகள் விற்பனை செய்தேன். 1890 இல் முதல் திருமணம் நடைபெற்றது.

# ஈராக் சிறைகளிலிருந்து 1000 தீவிரவாதிகள் தப்பியோட்டம்




ஈராக்கின் தாஜி மற்றும் அபுகரிப் நகரங்களில் உள்ள இரண்டு சிறைச்சாலைகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 1000 அல்-கொய்தா தீவிரவாதிகள் சிறையில் இருந்து தப்பியோடி விட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு சிறைகளையும் முற்றுகையிட்ட தீவிரவாதி விடிய, விடிய நடந்த துப்பாக்கி சண்டையில் 12 சிறைக் காவலர்களை சுட்டுக்கொன்றுவிட்டு சுமார் 1000 அல்-கொய்தா தீவிரவாதிகளை விடுவித்து சென்றதாக ஜிஹாத் அமைப்பினர் டுவிட்டரில் தகவல் வெளியிட்டனர்.

ஈராக் இராணுவ அதிகாரி ஹக்கிம் அல்-சமிலியும் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். பின்னர், சம்பவம் நடைபெற்ற சிறைகளுக்கு ஹெலிகொப்டரில வந்த இராணுவ வீரர்கள் தீவிரவாதிகளை அடித்து விரட்டியதாகவும் அவர் தெரிவித்தார்.

# வடகொரிய ஆயுதக் கப்பலில் கியூபாவின் யுத்த விமானங்கள்




வடகொரியாவின் ஆயுதக் கப்பலில் இருந்து கியூபாவின் மிக் ரக யுத்த ஜெட் விமானங்கள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பனாமா நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 1950 களில் சோவியத் ஒன்றியத்தால் தயாரிக்கப்பட்ட சுப்பர் சொனிக் ரக விமானங்கள் இரண்டும் இந்த கப்பலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இரண்டு ஏவுகணை ராடர் கட்டமைப்புக்களையும் குறித்த கப்பலில் இருந்து மீட்டுள்ளதாக பனாமா நாட்டு ஜனாதிபதி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆயுத உபரணங்களுடன் வடகொரியாவிற்கு சென்ற குறித்த கப்பல் கடந்தவாரம் பனாமா நாட்டு அதிகாரிகளால் வழிமறிக்கப்பட்டது. எனினும் இந்த உபகரணங்களை திருத்தம் செய்வதற்கென வடகொரியாவிற்கு அனுப்பியதாக கியூப வெளிவிவகார அமைச்சு கூறியிருந்தது.

சர்ச்சைக்குரிய அணுத்திட்டங்கள் காரணமாக வடகொரியாவிற்கு ஆயுதங்களை விநியோகிக்க ஐக்கிய நாடுகள் சபை தடைவிதித்துள்ளது. இந்த நிலையில் இந்த கப்பல் குறித்து விசாரணை செய்யுமாறு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையை பனாமா கேட்டுக் கொண்டுள்ளது. இதன்பிரகாரம் ஐ.நா அதிகாரிகள் குழு அடுத்த மாத ஆரம்பத்தில் பனாமாவிற்கு விஜயம் செய்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 அடுக்குமாடி பேருந்து தீப்பிடித்து தாய்லாந்தில் 19 பேர் கருகி சாவு



(கொழும்பு)

தாய்லாந்தில் லொறி மீது மோதிய வேகத்தில் 2 அடுக்குப் பேருந்து தீப்பிடித்து எரிந்த விபத்தில் 19 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். பாங்காக் நகரில் இருந்து சுமார் 50 பயணிகளுடன் ராய் எட் நோக்கி புறப்பட்ட 2 அடுக்குப் பேருந்து நேற்று அதிகாலை மத்திய சரபுரி மாகாண நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தது. எதிர்முனையில் படுவேகமாக வந்த சிமெந்து ஏற்றிய லொறி கட்டுப்பாட்டை இழந்து பேருந்துடன் மோதியது.

அதிகாலை நேரம் என்பதால் அரை தூக்கத்தில் இருந்த பயணிகள், என்ன நடக்கிறது? என்பதை யூகிப்பதற்குள் வேகமாக பரவிய தீயில் சிலர் சிக்கிக்கொண்டனர். விபத்து பற்றிய தகவல் அறிந்து விரைந்து வந்த மீட்புப் படையினர் பேருந்தினுள் இருந்து 18 பிணங்களை மீட்டனர். பலத்த தீக்காயமடைந்த 20 பயணிகளை அம்புலன்சில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். போகும் வழியில் ஒரு பயணி உயிரிழந்ததால் பலி எண்ணிக்கை 19 ஆக உயர்ந்தது. இந்த விபத்தில் சிக்கிய பேருந்து முழுமையாக எரிந்து அடையாளம் தெரியாதபடி உருக்குலைந்துவிட்டது.

# நடிகை மஞ்சுளா மரணம் சோகத்தில் திரையுலகம்



(சென்னை)

நடிகர் விஜயகுமாரின் மனைவியும், நடிகையுமான மஞ்சுளா சென்னையை அடுத்த ஆலப்பாக்கத்தில் வசித்து வந்தார். அவர் வீட்டில் உள்ள படுக்கை அறையில் கட்டிலில் இருந்து நேற்று முன்தினம் இரவு கீழே விழுந்தார். அப்போது கட்டில் கால் அவருடைய வயிற்றில் குத்தியதில் பலத்த காயம் ஏற்பட்டது.

உடனடியாக அவரை சென்னை போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் அவர மரணமடைந்தார். இறக்கும்போது அவருக்கு (வயது - 59) ஆகும்.

ஆலப்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் மஞ்சுளாவின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நடிகை மஞ்சுளா எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், என்.டி. ராமாராவ் போன்ற பழம்பெரும் முன்னணி கதாநாயகர்களுடன் ஜோடியாக நடித்து புகழ் பெற்றவர். 1953 ஆம் ஆண்டு பிறந்த மஞ்சுளா, 1969 ஆம் ஆண்டு 13 ஆவது வயதில் "சாந்தி நிலையம்" திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகம் ஆனார்.

1971 ஆம் ஆண்டு "ரிக்ஷாகாரன்" படத்தில் எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடித்த மஞ்சுளா, பின்னர் சிவாஜிகணேசன், ஜெமினி கணேசன், என்.டி.ஆர், நாகேஸ்வர ராவ், சோபன் பாபு, கமலஹாசன், ரஜினி காந்த் உள்ளிட்ட ஏராளமான நடிகர்களுடன் 100 இற்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, கன்னடமொழி படங்களில் நடித்துள்ளார்.

"உன்னிடம் மயங்குகிறேன்" படத்தில் நடிகர் விஜயகுமாருடன் ஜோடியாக நடித்து அவரையே காதலித்து திருமணம் செய்துகொண்டார். இந்த தம்பதிகளுக்கு வனிதா, ப்ரீத்தா, ஸ்ரீதேவி என்ற மூன்று பெண்கள் உள்ளனர்.

# விறுவிறுப்புடன் தொடர்கிறது நெடுந்தீவின் சமூக பொருளாதார அபிவிருத்தி

## என்றும் மாறாத பாரம்பரியம்...



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக நடாத்தப்படுகின்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வின் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டியாளர்களை சந்தித்து அமைச்சர் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் விளையாட்டு மைதானத்தில் இப்போட்டியாளர்களை அமைச்சர் சந்தித்தார். குறித்த போட்டியானது நெடுந்தீவின் பாரம்பரிய விளையாட்டுக்களை பிரதிபலிக்கும் வகையில் நடத்தப்பட்டது. குறித்த மைதானத்தில் தொடங்கிய இப்போட்டி நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் முடிவடைந்தது. இப்போட்டியை அமைச்சர் நேரில் பார்வையிட்டிருந்தார்.

## கல்வித்துறைக்கு ஊக்குவிப்பு...


நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற கற்றல் கற்பித்தல் சாதனக் கண்காட்சியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

மகாவித்தியாலய வகுப்பறைக் தொகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சி நேற்று நடைபெற்றது.

பாடசாலை சமூகம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர், குறித்த கண்காட்சி கூடத்தை திறந்து வைத்ததுடன் அவற்றை பார்வையிட்டதுடன் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.



## கற்பகதருவை விருத்திசெய்ய...




பனை அபிவிருத்தி சபையின் நெடுந்தீவு காரியாலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டி வைத்தார். மேற்படி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறி, நெடுந் தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் ஆகியோரும் நாட்டி வைத்தனர்.

## கலாசாரத்தை பாதுகாக்க...

நெடுந்தீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேவா கலாசார மண்டபத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். மேற்படி நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது 87 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடன் இக்கலாசார மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.





## அடிப்படை வசதிகள் மேம்பட...




நெடுந்தீவு பொலிஸ் நிலையத்திற்கு இரண்டு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்குமாறு நெடுந்தீவு பிரதேச செயலருக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார். மேற்படி பொலிஸ் நிலையத்துக்கு அமைச்சர் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் தமக்கு இரண்டு மலசலகூடங்கள் தேவையென கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தாகம் தீர்க்கும் குடிநீர்...

நெடுந்தீவு மணல் கடற்கரை பகுதியும் அதனை சூழவுள்ள பகுதிகளின் அபிவிருத்தி மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குறித்த பகுதிக்கு நேற்று அமைச்சர் விஜயம் மேற்கொண்டு இது தொடர்பில் ஆராய்ந்தார். இதன்போது கடற்கரைப் பகுதியை பார்வையிட்ட அமைச்சர், மக்கள் குடிப்பதற்கும் மற்றும் இதர தேவைகளுக்குமாக நீரைப் பெற்றுக் கொள்ளும் கிணறுகளை பார்வையிட்டதுடன் அவற்றின் பராமரிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.



## உயர்கல்வியில்...

கடந்த 30 வருடங்களாக மாணவர்கள் நிர்வகிக்க முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஹெரோயின் மற்றும் மது பானங்களை பாவித்து வந்துள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் எனினும் அதனை பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் மூலம் குறைக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்கு புதிய செயற்திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய...

அந்தோனிமுத்துவிடமிருந்தே இந்த அழைப்பிதழ் வந்திருப்பதாகவும் இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை ஆகஸ்ட் முதல் வாரத்தில் இடம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## "வாழ்வின் எழுச்சி"...

அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைத்தொழில் நடவடிக்கை யாழ். மாவட்டத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இதற்கென அச்சுவேலி கைத்தொழில் பேட்டை இந்திய அரசின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், அது புனரமைக்கப்பட்டதும் சுமார் 2000 பேர் இதில் வேலை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (பா,இ)

## மகேஸ்வரனின்..

தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது.

இதனிடையே மகேஸ்வரனது மனைவியும் நாடாளுமன்ற அங்கத்தவருமான விஜயகலா மகேஸ்வரன் ஐ.தே.கவின் வேட்பாளர் தெரிவில் பெரும் பங்காற்றியதாகவும் தெரகிறது.

## யாழில்...

தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்த 16 முகாம்களில், 13 முகாம்களிலிருந்து இராணுவம் வெளியேறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## அகதிகள்...

கிடைக்கவில்லை. இந்தநிலையில் படகில் சென்றோரின் உறவினர்கள் பெரும் கவலையடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கும் பபுவா நியூகினிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள அகதிகள் தொடர்பான உடன்படிக்கையையும் கருத்திற்கொள்ளாது இந்த அகதிகள் அவுஸ்ரேலியாவுக்கு படகுப் பயணத்தை ஆரம்பித்தாகக் கூறப்படுகிறது.

## மக்களின் துயர்...

தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது மக்கள் முழுமையாக நிமிர்ந்தெழும் காலம் நெடுந்தூரமில்லை. அதற்கான எமது இலட்சியக் கனவுகள் நிறைவேறும் பொற்காலம் கனிந்து வந்து கொண்டிருக்கிறது.

எமது மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திர பிரஜைகளாக, சகல உரிமைகளும் பெற்று முகமுயர்த்தி வாழும் காலச்சூழலே நாம் விரும்பும் இலட்சியக் கனவாகும்.

தமிழ் பேசும் மக்கள் தோற்றுப்போன சமூகம் அல்ல. இதை மெய்ப்பித்து, அடைய வேண்டிய எமது அரசியல் இலக்கின் வெற்றியைக் கொண்டாடி மகிழ, நாம் ஏந்த வேண்டியது அனுபவத்துடன் கூடிய அறிவாயுதம் மட்டுமே. நாம் செல்ல வேண்டியிருப்பது மதிநுட்பம் நிறைந்த, நடைமுறைசாத்தியமான வழிமுறை நோக்கியே.

எமது மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கேற்ற தியாக வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்ட நாம் இன்னமும் எடுக்க வேண்டிய உரிமைகளுக்காக குரல் கொடுத்தும், உழைத்தும் வருபவர்கள் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

நடைமுறை சாத்திய யதார்த்த வழி நின்று யாருடன் பேசி நாம் உரிமைகளைப் பெற முடியுமோ, அதே அரசோடு தொடர்ந்தும் நாம் உறவுக்குக் கரம் கொடுத்து வருபவர்கள்.

எமது மக்களின் உரிமைக்காக நாம் சுமந்திருக்கும் எமது உறுதிமிக்க உணர்வுகளும், அரசாங்கத்துடன் உறவைக் கொண்டிருக்கும் எமது வலிய கரங்களும் ஒன்றிணைந்தே இது வரை எமது மக்களின் ஒளிமயமான வாழ்க்கைக்காக திடம் கொண்டு உழைக்க முடிந்திருக்கிறது.

உரிமை என்பது வெறுமனே பேசிக்கொண்டிருப்பதற்கான பொழுது போக்கு விடயமல்ல. அது அடைந்தே தீர வேண்டிய எமது மக்களின் மாபெரும் சொத்து.

உரிமை என்பது தனியே அரசியலுரிமை மட்டுமல்ல. எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களை மறுபடியும் அபிவிருத்தியால் தூக்கி நிறுத்தி,

எமது மக்களின் வீடுகள் தோறும் வாழ்வியல் எழுச்சியை வரவழைத்து, எமது மக்களின் துயர் துடைக்கும் தேச இலட்சியப் பணிகளையும் கொண்டதேயாகும்.

வெற்று, வீரப் பேச்சுக்களால் எதையும் பெற்று விட முடியாது. அர்த்தமற்ற எதிர்ப்புக் கோசங்களால் எமது மக்கள் ஒருபோதும் நிமிர்ந்தெழவும் முடியாது. இதுவே யதார்த்தமாகும்.

ஆகவே, இது வரை தவறான அரசியல் தலைமைகளை தேர்ந்தெடுத்ததால் தோற்றுப்போன வழிமுறைகளை படிப்பினையாகக் கொண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சரியானவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

எமது மக்களின் துன்ப, துயரங்களில் பங்கெடுத்து வருபவர்களாகிய நாம் நிறுத்தியிருக்கும் வேட்பாளர்களை வெல்ல வைப்பதன் மூலமே எமது மக்களுக்கான இலட்சியக் கனவுகள் நிறைவேறும்.

எமது வேட்பாளர்களைத் தெரிவு செய்து, அரசியல் அதிகாரங்களைப் பெற்றுத் தந்து, மக்கள் எமக்கு ஆணை வழங்கும் போது, அவர்களை நீங்கள் தேடும் தீர்வின் திசை நோக்கி வழி நடாத்திச் செல்லும் கட்டாயக் கட்டளையை பொறுப்பு ஏற்பது எனது வரலாற்றுக் கடமையாகும்.


கிடைக்கின்ற அரசியல் அதிகாரத்தை பெற்று, இன்னும் பெற வேண்டிய அதிகாரங்களைப் பெறவல்ல, முதலமைச்சர் ஒருவரை வடக்கு தேசத்தின் விடிவெள்ளியாக நீங்கள் பெற்றிடவும் நானே பொறுப்பு.

அப்போது என் கனவாகிய உங்கள் கனவு நிறைவேறும். அரசியலுரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் பெற்றோம் என்ற நல்ல செய்தி அரங்கேறும்.

எனத் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற தமது அரசியல் இலக்கின் பயணம், எத் தடைகளையும் கடந்து வெல்லும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வடக்கின் அபிவிருத்தியை வெளிப்படுத்திய கருத்தரங்கு

## ஊடகவியலாளர் ஆர்வத்துடன் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

அரசாங்க தகவல்திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அரசாங்க அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பாக பிரதேச ஊடகவியலாளர்களை அறிவூட்டும் கருத்தரங்கில் பெருமளவு ஊடகவியலாளர்கள்பங்கு பற்றி பயனடைந்தனர்.

அரசாங்க தகவல் திணைக்களம் நாடு பூராவும் நடாத்தி வரும் இந்தகைய பிரதேச ஊடகவியலாளர்களை அறிவூட்டும் ஆறாவது நிகழ்வாகவே இந்நிகழ்வு அமைந்திருந்தது.

நேற்று முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகியஇந்நிகழ்விற்கு அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்தின அத்துக்கல, யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், ஏசியன்றிவியூ பத்திரிகை ஆசிரியர் கே.ரி.தாஜசிங்கம், தினகரன் ஆசிரியர் தில்லைநாதன், உள்ளிட்டவர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

பிற்பகல் 1.00 மணிவரை நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ். அரச அதிபர் சுத்தரம் அருமைநாயகம் யாழ். மாவட்டத்தின் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்தியின் துரித முன்னேற்றம் குறித்து பிரதேச ஊடகவியலாளர்களுக்கு தரவுகளுடன் விளக்கவுரையொன்றை வழங்கினார். அத்துடன் யாழ். பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்தவரும் சர்வதேச ஊடகவியலாளருமாகிய ஏசியன் றிவியூனின் பத்திரிகை ஆசிரியர் தாம் செய்தியாளராக இருந்து ஒரு பத்திரிகை ஆசிரியராக மிளிர்வதற்கு பின்பற்றிய விடயங்கள் குறித்து இங்கு கருத்துரை வழங்கியதுடன்தினகரன்ஆசிரியர் தில்லைநாதன் மற்றும்சிரேஸ்ட ஊடகவியாளர்கள் தமது கருத்துரைகளையும் வழங்கினர். இந்நிகழ்வில் யாழ்.நூல் நிலையத்திற்கான ஒரு தொகுதி நூல்களை அரச தகவல்திணைக்களத்தின் பணிப்பாளர் யாழ். பொது நூலக பிரதம நூலகரிடம் கையளித்தார். தொடர்ந்து இந்நிகழ்வில் பங்கு பற்றிய கிளிநொச்சி, யாழ். ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ் ஒன்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. (பா, இ)

# தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழு கூடுகிறது

தமிழர் விடுதலை கூட்டணியின் விசேட மத்திய செயற்குழு கூட்டம் நாளை நடைபெறவுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார். இந்த விசேட மத்திய செயற்குழு கூட்டத்தில் மாகாண சபை தேர்தல் மற்றும் இன்றைய அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் கூறினார். நாச்சிமார் கோவில் அருகாமையில் அமைந்துள்ள தமிழர் விடுதலை கூட்டணியின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையக தேசிய முன்னணி உதயம்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், புதிய இடதுசாரி முன்னணி, மற்றும் தொழிலாளர் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து மலையக தேசிய முன்னணியில் போட்டியிடவுள்ளன.

இந்நான்கு கட்சிகளும் ஒன்றிணைந்து மலையக தேசிய முன்னணி என்ற கூட்டமைப்பின் கீழ் போட்டியிட தீர்மானித்துள்ளதாக பிரபாகணேசன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணி மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். எனினும் ஏனைய மாவட்டங்களில் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

# கோப் அறிக்கை நாடாளுமன்றில்



பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் கோப் அறிக்கையை, குழுவின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகர நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

செப்ரெம்பர் மாதத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கோப் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இன்று அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் 244 அரச நிறுவனங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டில் 16 அரச நிறுவனங்கள் நட்ட மடைந்திருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர சபையில் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றுள் 14 நிறுவனங்கள் தொடர்ச்சியாக நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், குறிப்பிட்ட ஒரு வருடத்திற்குள் ஏற்படுகின்ற முழு நஷ்டத்தில் 98 வீதமானவை நான்கு நிறுவனங்களை மாத்திரம் சார்ந்துள்ளதாகவும் கூறினார்.

இலங்கை மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம், எயார் லங்கா மற்றும் மிஹின் எயார் ஆகிய நிறுவனங்கள் நஷ்டத்தை எதிர்நோக்குவதற்கு பல்வேறு காரணிகள் நிலவுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பு உறுப்பினர் நிசாந்தன் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தரித்து நின்ற வாகனத்தை அடித்து சேதப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தீவக இளைஞர் அணித் தலைவரும் மாநாகர சபையின் முன்னாள் உறுப்பினருமான நிசாந்தன் யாழ். நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.கடந்த 9ஆம் திகதி இரவில் வீதியில் நின்ற வாகனத்தை அடித்து அதன் கண்ணாடிகளை உடைத்ததுடன், வாகனத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பிரகாரம் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிசாந்தன் நேற்று செவ்வாய் கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த குற்றச்சாட்டு சோடிக்கப்பட்டது எனவும் பெய்யான முறைப்பாட்டை பொலிஸார் பதிவு செய்துள்ளதாகவும்மன்றில் நிசாந்தன் சார்பில் சட்டத்தரணிகளான என். சிறிகாந்தா, எம். றெமிடியஸ் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர.நிசாந்தனுக்குப் பிணை வழங்கக் கூடாது எனத் தெரிவித்து யாழ்.நீதிமன்றில் யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பெறுப்பதிகாரி சமன்சிகேரா தனது வாதத்தை முன் நிறுத்தினார.இதனை அடுத்து யாழ்.நீதிமன்ற நீதிபதி, நிசாந்தனை 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்ததுடன், மாதத்தில் ஒரு ஞாயிறு யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என நிபந்தனையுடன் பிணையில் விடுதலை செய்துள்ளார்.

# மாணவர்களின் பெரஹரா அலரி மாளிகையில் கோலாகலம்



கல்வியமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்கள் பெரஹரா நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 15 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பெரஹராவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இருந்து பார்வையிட்டார்.கல்வியமைச்சினால் மூன்றாவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பெரஹராவில் சிங்கள-தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கொழும்பு மகாநாம வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்த பெரஹரா, கொள்ளுப்பிட்டி, காலி முகத்திடல், அலரி மாளிகை வீதியூடாக கொழும்பு ஹுணுப்பிட்டி கங்காராம விகாரையை சென்றடைந்தது.அலரி மாளிகையில் அமைக்கப்பட்ட விசேட மேடையிலிருந்து ஜனாதிபதி இந்த பெரஹராவைப் பார்வையிட்டார்.

கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தலைமையிலான அமைச்சர்கள் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இலங்கையரின் கடை லண்டனில் எரிப்பு



பிரித்தானியாவின் லிவர்பூல் பகுதியில் இலங்கைத் தமிழர் ஒருவரின் பிரபலமான கடையினை இரண்டு முகமூடியணிந்த திருடர்கள் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது,

இலங்கையைச் சேர்ந்த 48 வயதான ஜுட் ஜீவன் என்பவர் புலம்பெயர்ந்து பிரித்தானியாவிலுள்ள லிவர்பூல், பிரயோரி வீதியில் அமைந்துள்ள பகுதியில் கடை ஒன்றினை நடாத்தி வந்துள்ளார்.இந்நிலையில் கடந்த ஜுன் 8ஆம் திகதி 9 மணியளவில் தம்மை உருமறைப்புச் செய்து கொண்டு கடைக்குள் நுழைந்த இருவர், திருட முற்பட்டதுடன் இனவெறிச் சொற்களை பிரயோகித்து கடும் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் இருவரையும் வெளியேற்ற முயன்ற ஜுட் மீது தீ மூட்ட முயன்றுள்ளனர். இதன் போது பதட்டமைந்த அவர் நிலை தடுமாறி எரிபொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட பகுதியில் விழுந்துள்ளார்.பலத்த எரி காயங்களுக்குள்ளான ஜுட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் சில வாரங்கள் அங்கே தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார். இதனால் உயிராபத்தில் இருந்து தப்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஜுட் ஜிவன், பொலிஸாரிடம் விபரிக்கையில்,நான் தற்பொழுது உயிர் பிழைத்திருப்பது பேர் அதிசயமே. இவ்விரு சந்தேக நபர்களும் முகமூடி அணிந்திருந்தனர். நான் இவ்விருவரும் கிண்டல் செய்வதாகவே எண்ணினேன். ஆயினும் திடீரென பெற்றோல் ஊற்றி தீயிட்டனர். அயலவர்களின் உதவியுடன் தற்பொழுது உயிர் பிழைத்துள்ளேன் என பொலிஸாரிடம் தெரிவித்தார்.

# தப்பிச்சென்ற புலிகள் பிரிட்டனில் தஞ்சம்

(கொழும்பு)

நாட்டிலிருந்து தப்பிச் சென்ற புலி உறுப்பினர்களுக்கு பிரிட்டன் வேறு பெயர்களில் கடவுச் சீட்டு வழங்கியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று குற்றஞ்சுமத்தியுள்ளது.இதன் காரணமாகவே குறித்த புலி உறுப்பினர்களை சர்வதேச பொலிஸாரினால் கைது செய்ய முடியவில்லை.

இலங்கையில் தேடப்பட்டு வரும் நபரான லோகேஸ்வரன் மணிமாறன் என்பவருக்கு சுந்தரமூர்த்தி மணிமாறன் என்ற பெயரில் பிரிட்டன் அரசாங்கம் கடவுச் சீட்டு விநியோகம் செய்துள்ளது. இலங்கையில் தேடப்பட்டு வரும் ஐந்து புலி உறுப்பினர்கள் பிரிட்டனில் தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு எதிராக சர்வதேச பொலிஸார் பிடிவிறாந்து உத்தரவுகளை பிறப்பித்துள்ளனர். எனினும், இவர்களை கைது செய்து சர்வதேச பொலிஸாரிடம் ஒப்படைக்க பிரிட்டனின் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என குறித்த சிங்கள ஊடகம் குற்றம் சுமத்தியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.